
கம்பன் சுவை



கவிஞர் செவ்வேள்

சேகர் பதிப்பகம்

கம்பன் அடிப்பொடி
KAMBAN ADIPPODI
(SAW. GANESAN)

307

நூல் வெளியீடு

கம்பன் விழா

கம்பன் கலை அரங்கம், புதுவை
9-5-1980

புதுவை, கல்வி அமைச்சர்
மாண்புமிகு
ரேணுகா அப்பாதுரை
அவர்களால்
வாழ்த்தி வெளியிடப் பெற்றது

BIBLIO GRAPHICAL DATA

Title of the book	KAMBAN SUVAI
Author	SEVVEL
Language	Tamil
Edition	First., May 1980
Copy right holder	KAMBAN KAZHAGAM, PONDICHERRY
Paper used	11.6 kg. D. Cr. White Printing
Size of the Book	18 X 12.5 C.m
Printing Points used	10pt.
No. of Pages	112
No. of Copies Printed	1,100
Printer	VETTRI ACHAGAM Madras-5
Binding	Card Board Binding
Price	**Rs. 6.00**
Publisher	SEKAR PATHIPPAGAM Madras-78
Subject	Poetry Literature
Call Number	O 31, 1E 50 :g N 80

கம்பன் சுவை

கவிஞர் செவ்வேள்

சேகர் பதிப்பகம்
புத்தகம் வெளியிடுவோர்
விற்பனையாளர்

66, பெரியார் தெரு
எம். ஜி. ஆர். நகர்
சென்னை-600 07

முதற்பதிப்பு : மே, 1980

விலை ரூ. 6.

அச்சிட்டோர்
வெற்றி அச்சகம்
சென்னை-600 005

முன்னுரை

புதுவையில் 1966-ஆம் ஆண்டில் கம்பன் விழா கால்கோள் கொண்டது. அரங்கேறத் தேர்ந்தெடுத்த கவிஞர்களில் அடியேனும் ஒருவன். அதுமுதல் கம்பனைப் பாடும் வாய்ப்பு! அவ்வண்ணம் பாடிய பத்து கவிதை களின் தொகுப்பு இந்நூல். முதல் கவியரங்கத்தில் பாடிய பொதுத் தலைப்பு 'கம்பன் தரும் .சுவைகள்'. அதன் அடிப்படையில் இது ''கம்பன் சுவை'' ஆகியது.

பாடல்களைத் தொகுத்து நூலாக்கும் ஆவலை அருணகிரி 'விதைத்தார். வெள்ளையாம்பட்டு சுந்தரம் அச்சில் உழுதார். இந்த வண்ண நூல் விளைந்தது. இருவர்க்கும் என் அன்பு கலந்த நன்றி.

இந்த ஆண்டு புதுவைக் கம்பன் விழாவில் புதுவை மாநிலத்தின் மாண்புமிகு கல்வி அமைச்சர் திருமதி ரேணுகா அப்பாதுரை அவர்கள் இந்நூலை வெளியிட இசைந்தது பெருமை தரக் கூடியது. மாண்புமிகு அமைச் சருக்கு என் அகங்கனிந்த நன்றி.

ஏதோ என்னளவில் கம்பனுக்குச் செய்த சிறு காணிக்கையாக இதனை முன் வைக்கிறேன், அவன் சார்பில் தமிழுலகம் ஏற்கும் என்ற நம்பிக்கையோடு!

செவ்வேள்

கவிதை மணம் கமழட்டும்!

தமிழ்க் கவிஞர்கள் தொகை மிக அதிகமாகவே தெரிகின்றது. அவர்கள் எழுதும் கவிதைகள் குறைவு தான். அவற்றிலும் நூல்களாக வெளிவருபவை மிகக் குறைவே. அவையும் விரும்பி வாங்கப்படுவதில்லை. இது மாபெரும் குறை !

எத்தனை கவிஞர்களின் வீடுகளில் கவிதை நூல்கள் திரட்டப்பட்டிருக்கின்றன? எத்தனை பேரிடம் நூலகங்கள் உள்ளன? உணவுப் பொருள்கள், உடைகள், உல்லாசப் பொருட்கள் மட்டுமே வாங்கும் கற்றவர்கள், மேலும் படித்தறியவேண்டும் என்று விரும்பிப் புத்தகங்களையும் வாங்கவேண்டாமா? நம்மவரிடம் இந்த படிப்பார்வம் இல்லை என்பதால்தானே சிறந்த நூல்கள் விரிந்த அளவில் உருவாகாமல் இருக்கின்றன!

கவிஞர் என்போரே கவிதைநூல் வாங்க முன்வருவதில்லை என்கிறபோது மற்றவர் மட்டும் எவ்வாறு வாங்குவர்? கவிதைநூல்கள் இவ்வாறே அனைவராலும் புறக்கணிக்கப்படுகின்றன. இதைப்பற்றி ஒருவரும் பொறுப்போடு சிந்தித்ததில்லை; செயற்பட முனைவதுமில்லை. கவியரங்குகள், பட்டிமன்றங்களிலாவது மாலை, துண்டுகளுக்கு மாற்றாகக் கவிதை நூல்களையும் மற்ற நூல்களையும் பரிசு தரலாம். இந்நிலை கைவரின் ஒரு சிலர் வீடுகளிலாது நூல்கள் குடியேறும்!

சிறந்த கவிதைகள் உருவாகவேண்டும், அவற்றை நூலாக்கி வெளியிட வேண்டும் என்ற கருத்துடையவன் நான்.

உவமைக் கவிஞர் சுரதாவின் 'தேன்மழை' கவிதைத் தொகுப்புக்குப் பின் கவிதைநூல் வெளியிடாமல் ஒதுங்கி யிருந்தேன். மதிப்பிற்குரிய புலவர் அருணகிரியார் 'கவிஞர் செல்வேள் அவர்களது கவிதைகள் சிறப் புடையன; மரபுவழி பிறழாத மணிக் கவிதைகள்! அவற்றை அழகுற வெளியிடவேண்டும்' என்றார்.

கவிமரபை மறவாத கவிஞர் செவ்வேள் அவர்களை எனக்கு அறிமுகம் செய்த புலவர் அருணகிரியாருக்கு என் அன்பும் போற்றுதலும் உரியதாகும்.

கவிதை மணங்கமழும் புதுவைக் கவிஞர் செவ்வேள் அவர்களின் கவிதைகள் இனியவை; அவரும் இனியவர்; நல்லவர்; நட்புக்குரியவர். கம்பன்திறம் பாடிய அவர்தம் முத்துக் கவிதைகள் பத்தினைத் தொகுத்துச் சுவைக் கொத்தாக வெளியிடுகின்றேன். கவிஞர் செவ்வேள் அவர்களின் **கம்பன்சுவை**, பிறந்த வீடான புதுவைக் கம்பன் விழாவிலேயே வெளிவருவது பொருத்தமாகும்.

தமது கவியரங்கக் கவிதைகளை வெளியிட அன்புடன் இசைவளித்த கவிஞர்க்கு நன்றி. கவியுள்ளம் கொண்ட தமிழ் அன்பர்தம் கரங்களில் இந்நூல் தவழுமென நம்புகிறேன்.

தள்ளினும் தளராது, துள்ளிவரும் தமிழ்க் குழந்தை யாகக் **கம்பன் சுவை** எனும் இக்கவிதைத் தொகுப்பினை உள்ளமுவந்து வெளியிடுகின்றேன். அன்போடு அள்ளி எடுத்து ஆதரிப்பீர் என வேண்டுகின்றேன்.

அன்பன்

வெள்ளியாம்பட்டு சுந்தரம்

உள்ளடக்கம்

ஒன்று



நாள்	15-5-1966
இடம்	புதுவை - கம்பன் கலை அரங்கம்
தலைமை	கி. வா. ஜகந்நாதன் அவர்கள்
பொருள்	கம்பன் தரும் எண்சுவை:

வெகுளி

வெகுளி

கலைமகளின் அருளுகந்த கவியரசன் புகழ்பரவக்
கலைமகளின் அருளுகந்த கவிவலவர் தலைமையிலே
தலைமுறைகள் பலகடந்துந் தலைமறையாப் புகழடைந்த
நிலைமுறையில் நெடியவன்சீர் நிகழ்த்துகின்ற நெடுங்கதையுள்
எண்வகைசேர் மெய்ப்பாடும் எழுப்புகின்ற சுவைநலத்தைப்
பண்வகைசேர் பாக்களிலே பகருமொரு திருப்பணியை
எடுத்தவர்க்கும் கைந்நிறைய எடுத்தவர்க்குக்
கொடுத்தவர்க்கும்
அடுத்தபடி இங்கிருக்கும் அனைவருக்கும் என்வணக்கம்!

ஆறுசுவை மடுத்தவரை அறியாமை யுறவடுத்து
வேறுசுவை வழங்குதற்கு விருப்புற்று வருகின்றேன்!

உலகுபுகழ் தமிழ்த்தாதை உவந்தேத்தும் அளியார்முன்
குலவுதமிழ் மணமறியாக் குவிமுகையாய் வருகின்றேன்!

வெகுளாமை வேண்டுமெனும் வள்ளுவர்சொல்
வேண்டேன்போல்
வெகுளிக்குப் புகழ்பாடும் வெகுளியென வருகின்றேன்!

ஊரெழுந்த இடமெல்லாம் உரையெழுப்பிப் புகழ்பாடும்
தேரழுந்தூர்ப் புலவனுக்குச் சீரெடுக்க வருகின்றேன்!

எனவே,

கோடு கிழித்தொரு குழவி காட்டிட
ஆடு கொம்பதென் றன்னை மகிழ்தல்போல்
சிற்றறி வுடையேன் வெற்றுரை யெல்லாம்
வழுக்கள் நிறைந்த இழுக்கலே ஆயினும்
தெய்வ மாக்கதை தைவரும் அதனால்
பாட்டெனக் கொண்டு கேட்டு மகிழ்வீர்
குற்றம் நீக்கிக் குணங் கொள்
பெற்றிய ராகக் கற்றவர் நீரே!

புகழ்முற்றிய புலவர்க்கிறை தருகாவிய வானில்
வெகுளிச்சுவை பொதுளச்சுடர் உடுமிக்கன அவற்றின்
தொகையத்தனை யுமுரைத்திடு தகவுற்றிலன் எளியேன்
துகளத்தனை புகலப்பெரி தெனஒப்புவிர் நன்றே!

கோசிகன் வெகுளி

விரிகின்ற கானகத்தே வேள்விசெயும் விழைவால்
விசுவாமித் திரமுனிவன் தயரதன்முன் வருவான்.
திரிகின்றார் அரக்கரவர் தீங்கழிய உன்றன்
''திருமகனைத் தருக''வென ஒருவனையே கேட்பான்.
''தருகின்றேன்'' என்றொருசொல் தார்வேந்தன் உடனே
தரவில்லை அவ்வளவில் தாழ்சடைமா முனிக்கு
வருகின்ற தடடா!ஓ! பெருவெகுளி அதனை
வார்த்தையிலே படமெழுதிக் காட்டிடுவான் கம்பன்!
அமர்ந்தமுனி எழுந்தனனும்! அவ்வளவே! அமரர்
அருண்டனராம்! ஐயையோ! ஊழிவந்த தென்று
குமைந்தனராம்! வெப்பெறிந்த கூர்விழிமுன் நாணிக்
கொடுவெய்யில் ஒளிந்ததுவாம்! குனிப்புடைய புருவம்
அமர்ந்திருந்த திருநுதலின் அடிவரையின் நீங்கி
ஆர்வமுறக் கொடுமுடியை அளப்பனபோல் மாறிச்
சமைந்தனவாம்! இவ்வாறு அவற்றிற்கும் வெகுளி
சார்ந்ததுபோல் படமெழுதிச் சாற்றுகிறன் கம்பன்!

இரைகண் டனவாய் அமரும் இளமான்
நிரையின் நடுவண் படுசீ யமெனப்
புரைகண் டவனைப் புகழார் முனிவன்
உரையொன் றுரையா துரமுற் றெழலும்

உருமுற் றிடுமோ உலகத் தனையும்
இருளுற் றிடுமோ இருநாற் றிசையும்
எரியுற் றிடுமோ இனுமெத் தனையோ
வரவுற் றனவே எனுமெண் ணமெழும்!

உரையே புகலா அருமா முனிவன்
உருவத் திரிவில் புருவச் சரிவில்
விரைவுற் றெழுமோர் வெகுளிச் சுவையைத்
தருமத் திறமை அருமை! அருமை!

குணமுற் றியமா முனிவர் வெகுளிக்
கணையிட் டமையார் கணமும் இதனைத்
துணியப் படுமா றுறுகம் பனுரை
அணியொத் தியலும் அழகே! அழகே!

ஈரடியான் மூவுலகை அன்றளந்த திருமாலை
ஏய்ப்ப ஆறு

சீரடியான் இயங்குமொரு பாவினிலே தவமுனிவன்
சினத்தை யெல்லாம்

ஈரடியான் அடக்கிவிடுங் கம்பன்செய் யுட்பொருளின்
ஏற்ற மெல்லாம்

நேரடியாய்ச் சொல்வதெனில் இயலுங்கொல்! அடியேனால்
நிகழ்வ தன்றே!

கைகேயி வெகுளியும் உவகையும்

முறைவைத்த தொல்காப்பி யச்சூத்தி ரத்துள்
முன்வைத்த வெகுளிக்குப் பின்உவகை வைத்தார்

நறைவைத்த கம்பனது காப்பியத்தி னுள்ளும்
நகைவைத்த உவகைக்கு முன்வெகுளி காண்போம்!

குறைவைத்த நெஞ்சினளாங் கூனியிற்சொற் கேட்டுக்
குலக்கொடியாள் கைகேயி கொதித்தெழுவாள் பின்னர்

மறைவைத்த மொழிகுறித்த மாற்றமெலாந் தேர்ந்து
மகிழ்ந்திடுவாள்! பரிசுகளும் பகிர்ந்திடுவாள் அன்றே!

தம்பியர் வெகுளி

பாரதத்தில் தம்பியர்க்கு வெகுளிவரல் உண்டு
பகடைக்காய் உருட்டியபின் பாண்டவருட் சிறியோர்

போரதனைக் குறித்துச்சூள் புகன்றிடுவார்! வெகுண்டு
பொங்கிடுவார்! அவ்வமயம் அவர்க்குற்ற வெகுளி

பாரடங்கத் தோற்றதனல் பகைமையொடு வந்த
பான்மையினல் தந்நலத்தின் பாற்பட்ட தன்றே!

மாரதனின் மக்களிலே இளையோரின் வெகுளி
மற்றையவர் நலத்துக்கே வருவதனைக் காண்போம்!

பரதன் வெகுளி

கேகயத் தன்னம் ஈன்ற கெழுதகைச் செம்மல் ''தாதை
ஏகினன் வானம்! அண்ணன் இன்றுணை இளவ லோடும்
ஏகினன் கானம்!'' என்னும் இனேயன அறியா னுகி
ஆகுளஞ் சார மீள்வான் அன்னையின் நாட்டி னின்றே!

அண்ணனைக் காண லாகும் ஆவலே முன்னே செல்ல
மண்ணக வேந்தைக் காணும் மகிழ்வதை அடுத்துச் செல்ல
உண்ணலம் வெதுப்ப வாய்ந்த ஒருபெரும் அவலம் பின்னே
கண்ணுறத் தெரியா தாகிக் கடிநகர் உய்க்கப் போந்தான்!

மங்கலம் இழந்த மங்கை மானுநீள் நாடு கண்டான்
திங்களை இழந்த வானின் திகழ்தரு நகரைக் கண்டான்
கங்குலில் இழந்த வையம் கவினெலாம் இழப்ப தொப்ப
எங்கணும் பொலிவி ழந்தே இருந்ததோர் நிலைமை கண்டான்

தாதையைக் காணுன்! தேடித் தளர்ந்தனன்! தாயின் ஏவல்
கோதையாள் ஒருத்தி சொல்லக் குறுகினன் தாயை! அந்தப்
பேதைமை செய்த பெண்ணுல் பிழைபடப் பிறந்த வீட்டுச்
சேதியைக் கேட்டாள்! அந்தச் சிறப்பினை என்ன சொல்ல!

கொழுநனை இழந்த துன்பம் குன்றியுந் தோன்றச் செய்யாள்
முழுமுதல் மைந்தன் கானம் முன்னிய முடிவை எண்ணுள்
பழகிய தந்தை தாயர் பரிசுகள் கேட்டாள் அந்த
அழகினை என்ன சொல்ல! அன்னையா? பெண்ணு அன்னுள்?

''குறையிலர்'' என்று கூறிக் ''கொற்றவன் எங்கே?'' என்று
மறுவிலா மைந்தன் கேட்க மற்றுமவ் வணங்கை யொத்தாள்
அறுபதி னுயி ரத்தின் ஆண்டுகள் ஆண்டான் உம்பர்
உறுபதி சென்ருன் என்றே உரைத்தனள் வருத்தம் இன்றி!

தள்ளிய குதிரை மேலுந் தாழ்குழி பறித்தல் போல
எள்ளுறு கேக யத்தாள் இறைவனைக் காலன் கையில்
கொள்ளையுங் கொடுத்து விட்டுக் கூறிய குறிப்பி னாலே
பிள்ளையின் வெகுளி மூளப் பிள்ளையார் சுழியும் போட்டாள்!

இத்தனையும் பின்னணிஇ சைத்திடுதல் போலே
முத்தனைய பாக்களில்மொ ழிந்தவுடன் கம்பன்
கத்துகடல் பொங்களரி கக்கிஎழு வெள்ளம்
ஒத்துவரும் ஓர்நிலையின் ஓவியம்வ டிப்பான்.

தந்தையைஇ ழந்தநிலை தந்ததுயர் மாற
முந்தியவ னைப்பணிய முன்னியம னத்தான்
சிந்தையழி வற்றவள்தெ ரிக்கும்வகை வேண்ட
வெந்தபுணில் வேல்நுழைய வேண்டினளு ரைப்பாள்!

முன்னிருவ ரங்கொடுமு றைப்படிஇம் மண்ணைத்
தன்னுடைய மைந்தனடை யுந்தகுதி செய்ய
முன்னவன்வ ளம்புகழு டுக்கியவி தங்கள்
அன்னவை யனைத்தையுமவ் வன்னையுரை செய்தாள்.

ஆவல்நிறை வேறவிலை; அப்பனுமி றந்தான்
தாவறுகு ணத்தவனுந் தாழ்சடைய னாகி
மேவினன்வ னத்துளெனு மெய்யகம்வெ துப்பும்
நோவுறுஉ ரைசெவிநு ழைந்திடவு மாங்கே

வந்ததுபெ ருஞ்சினம்வ ரைப்பொருவு தோளான்
வெந்தனன்வி ழுந்தனன்வெ டித்தனன்து டித்தே
கந்துகம தக்கரிக டத்துபவ னின்றி
எந்தநிலை பெற்றுவரும் அந்தநிலை பெற்றான்!

ஐந்தருவி யாயிழிவ தாறெனவு மாகி
வந்துகடல் மானுமொரு மாண்வடிவு கொள்ளும்
அந்தநிலை யால்வெகுளி ஆதுமுறை காட்டிச்
சந்தமிகு செந்தமிழ்வி ருந்திடுவன் கம்பன்!

பெற்ற தாயின் வாய்நி ழித்த பேச்செ டுத்த நெஞ்சிலே
பற்றி எற்றி டத்து டித்த பாங்கெ டுத்த மெய்யிலே
பற்று வைத்த கோயி லைப்ப ழித்து ரைத்த சொல்லிலே
முற்றி மீளு வெஞ்சி னத்து மொய்ம்பு முற்றுங் காணலாம்!

கொன்றி ருப்ப தத்தி ராக வன்பொ றுக்க லானென
நின்றி ருப்ப னேய லாது நேய முற்ற தாயினைக்
கொன்றி ருப்ப னும்உ டன்கொ தித்தெ ழுந்த கோளரி
என்று ரைக்க வந்த சீற்றம் எத்து ணைச்சி றந்ததே!

வெகுளிகொண்ட மாந்தரிங்கு மேன்மை எய்தல் உண்டுகொல்!
தகவு கொல்த னைப்ப யந்த தாயின் மீது சீறுதல்
இகலி லாத மைந்த னிங்கி ரண்டி னால டைந்தது
நிகரி லாப்பு கழ்வ யத்தி னிற்க நேர்ந்த மாட்சியே!

முடியே புனைந்தரசு முறையே புரக்குமுறை
முதல்வன் துறக்க வதனால்

குடிகோள் எனும்பழியும் படுமே எனச்சினவிக்
குறையே படாத இளையோன்

துடியாய்த் துடிக்களரி மலையாய் வெடிக்கஅதைத்
தொகைசேர் விருத்தமெனும்பா

அடியால் அளப்பவன்சொல் அழகின் பரப்பளவை
அடியேன் அளக்க வருமோ !

இலக்குவன் வெகுளி

இராமாய ணத்துள்ளே வெகுளி என்றல்
இராகவனின் தம்பியருள் ஒருவ னுக்கே
நாமாக முதற்பரிசு தருவோம்! அந்த
நல்லவனை யாரென்று சொல்ல வேண்டும்?
கோமான்றன் புதல்வரிலே வெகுளி யென்னுங்
குன்றேறி நிற்பவனவ் விளைய பெம்மான்!
ஏமாற்றம் உருக்கொண்ட காலை யன்றே
இளையவனின் வெகுளியினைப் பார்க்க வேண்டும்!

அறத்திற்கே ஊறுவந்து விட்ட தென்றல்
அரைநொடியும் அவன்பொறுக்க மாட்டான்! வில்லின்
திறத்தாலே மூவுலகைத் தீர்த்துக் கட்டிச்
செப்புகின்ற விதிக்குவிதி செய்யப் போவான்!
மறத்திற்கே வாய்த்தஒரு கடவுள் போல
வடிவெடுப்பான்! அவன்சினத்தை யார விப்பார்?
அறத்திற்கே நாயகனாய் இருக்கின் றனே
அவன்வந்து தானதனை அவிக்க வேண்டும்!

போக்கற்றுப் பத்துமுகம் உடையான் தங்கை
புத்திகெட்டுப் புன்மொழிகள் பேச வந்தால்
மூக்கிற்கு மேல்கோபம் வருமாம்! அந்த
முளரிமுகன் தம்பிக்கு! மேலும் வந்து
நாக்கொழுக்கப் பழுதுரைத்தால் காதை ஒட்ட
நறுக்கிடுவான்! நாடாளும் பரிசில் பெற்றேன்
வாக்களித்த படியொழுகாக் குரங்கே யானல்
வாலறுக்க வந்துநிற்பான் வாளி யோடு!

''சினமுடையான் என்தம்பி!'' என்று சொல்லிச்
செம்மாந்து பேசுகிறன் சீதை கேள்வன்.
முனம்வந்தென் தம்பியெதிர் நிற்ப வர்கள்
மூவுலகில் இல்லையென்று மாசில் லாத
மனமுடைய இராகவனே பேசு வானேல்
மற்றென்ன நான்சொல்ல இருப்ப திங்கே!
இனுமென்ன? இலக்குவனின் சீற்றம் பற்றி
எத்தனையோ இசைத்திடலாம் நேரம் எது?

குகன் வெகுளி

தலைக்கை ஏந்தித் தாழ்ந்திடவே
　　தம்பி யானோன் வருகின்றான்
தொலைக்குத் தெரியும் அவனுருவம்
　　தோன்றக் கண்டான் ஒருவேடன்!
அலைக்க வந்தான் அண்ணனையே
　　அழிக்க வந்தான் அவனென்றே
சிலைக்கை வேடன் நினைக்கின்றான்
　　சினத்தாற் பொங்கி யெழுகின்றான்.

காணப் பெற்ற கடவுட்குக்
　　கண்ணுக் கெதிரே பிழைநேர்ந்தால்
பேணிப் போற்றும் பக்தனவன்
　　பேசா திருந்து விடுவானோ?
நாணத் தன்னைத் தம்பிஎன
　　நயந்த மன்னன் துயர்கொள்ளத்
தோணி செலுத்துந் தொண்டனவன்
　　தூணைப் போல நிற்பானோ?

இருகை கூப்பித் தொழுதற்கே
　　ஏற்ற அண்ணல் இராமனொடு
பொருகை வேலும் வாளோடும்
　　போர்செய் தலைக்கப் புறப்பட்டோர்
வருகை தந்தால் குகப்பெருமான்
　　வாளா திருந்து விடுவானோ?
ஒருகை பார்க்க மாட்டானா?
　　உரங்கொள் கங்கைக் கரையுடையான்!

எத்துக் கொண்ட வழியாலே
    ஏற்ருன் அரசை! அம்மட்டில்
ஒத்துக் கொண்டு போகாமல்
    ஊரைக் கூட்டிச் சண்டையிடப்
பித்துக் கொண்டான் பரதனெனப்
    பிழையாய் எண்ணும் குகனுக்குப்
பொந்துக் கொண்டு வருகின்ற
    பொல்லாச் சினத்தின் அழகென்ன!

இராவணன் வெகுளி

தன்னுருவைக் காட்டாமல்
    தலைமறைவாய்ச் சீதையெனும்
மின்னுருவைக் கவர்ந்திடவே
    மேவினன் இலங்கையர்கோன்!
பொன்னுருவங் கொண்டாள்முன்
    பொக்கென்று வெகுளிவர
''என்னுருவைப் பார்!'' என்றே
    இருபதுகண் காட்டிவிட்டான்.

நேயந்தான் உறவைத்த
    நேரிழையைக் கவருதற்கு
மாயந்தான் வல்லதென்று
    மாமுனிவன் கோலத்தில்
போயுந்தான் இலங்கைக்கோன்
    பொல்லாத கோபத்தால்
சாயந்தான் வெளுத்துவிடத்
    தலைபத்துங் காட்டிவிட்டான்.

மலைசெய்த திண்டோளான்
வாழ்நாளுக் கெல்லையற்ற
நிலைசெய்த தன்புகழை
நிகழ்த்துங்கால், காகுத்தன்
சிலைசெய்த சீருரைத்துச்
சீதையவள் அவன்புகழைக்
கொலைசெய்தால் அவனுக்குக்
கோபந்தான் வருமன்றோ?

வானத்தை மண்ணகத்தை
வளைத்தாலும் வகைசொல்லிக்
கானத்தே இருப்பவளைக்
கைக்கொள்ள அவன்வந்தால்
ஊனத்தை அரக்கர்களின்
ஊற்றத்தை அவள்பழித்து
மானத்தை வாங்கிவிடில்
கோபந்தான் வருமன்றோ!


வானிடற நின்றவொரு
மலையிடற வைத்தவனை
ஏனிடர்தான் வருமென்றே
இறுமாந்த வானவர்தங்
கோனிடற வைத்தவனைக்
குறியாமல் பெண்ணரசி
மானிடர்தாம் வலியரென்று
வழக்கிட்டால் பொறுப்பானோ?

உரம்பெற்ற தோளென்ன
    ஒன்றுக்குப் பத்தாகச்
சிரம்பெற்ற சிறப்பென்ன
    செய்யாத தவஞ்செய்து
வரம்பெற்ற வாழ்வென்ன?
    இத்தனையும் வாய்த்தவனின்
பரம்பரையைக் குறைசொன்னால்
    பொறுப்பானா படையுடையான்?

இப்படியே இராவணனின்
    சீற்றத்தை எடுத்துரைத்தால்
அப்படியே அதுபெரிய
    இராமா'யணமாகும்!
ஒப்புவிரா என்பாட்டை
    ஓயாமல் ஒப்புவித்தால்!
இப்பொழுதுக் கிதுபோதும்
    எனச்சொல்லி அமைகின்றேன்!

வாழிய கம்பனின் வான்புகழ் மாலை!
வாழிய வன்தரு மாண்புறு சந்தம்!
வாழிய வண்டமிழ் மேவிய செந்தேன்!
வாழிய எண்சுவை வாய்தரு நூலே!

இரண்டு



நாள்	14-1-1968
இடம்	புதுவை வானொலி நிலையம்
தலைமை	மு. த. வேலாயுதனார்
பொருள்	கம்ப ராமாயணப் பாத்திரங்களில் எவரது தியாகம் மகத்தானது?

இலக்குவன் தியாகம்

இலக்குவன் தியாகம்

கம்பன் எழுப்பிய காப்பியக் கோயிலுக்குள்
வம்பு விளைத்து வழக்காடிப் பாடென்ற
வானொலி யார்க்கும் வளமோங்கு செந்தமிழிற்
பாநலங் காட்டப் படையெடுப் பார்க்கும்
தமிழணங்கு பெற்ற தலைவர்க்கும் பொங்கல்
அமிழ்துண்ண வந்த அனைவர்க்கும் என்வணக்கம்!
கம்பனை யானொருநாள் கற்பனையில் சந்தித்துக்
கும்பிட்டுக் கேள்விக் குறியொன்று போட்டேன்!
''கவியரசே! உன்றன் கதைமாந்தர்க் குள்ளே
புவிமெச்சத் தியாகம் புரிந்தவர்கள் யார்?'' என்றேன்.
''தலைக்கொன்று சாற்றுவர் தம்பீ! எனினும்
இலக்குவன் றன்மேல் இலக்குவை!'' என்றே
கழறி மறைந்தான்அக் காப்பியம் யாத்தோன்
பழுதில் இளையவனைப் பார்க்கலாம் என்றிருந்தேன்.
அப்போ தலர்ந்த அழகு முகங்காட்டி
எப்பால் இருந்தோ இராமன் எதிர்வந்தான்.
அண்ணலே! நீயே அரும்பெருந் தியாகியெனத்
திண்ணமாய்ச் செப்புவேன்! தேர்வேந்தன் சொல்காக்க
மண்ணுளுஞ் செல்வமும் மாண்ட மனைவாழ்வும்
எண்ணுமல் ஓர்நொடியில் எல்லாந் துறந்தனையே!''

என்றேன். அறஞ்செய்ய இப்பாரில் வந்தவனே
என்னோ டுடன்படுதல் இன்றி உரைசெய்தான்.
''நீங்கா நிழல்போல நீள வெனைத்தொடர்ந்து
தாங்காத் துயர்பலவுந் தாங்கினான் என்னிளவல்!
கானகஞ் செல்லக் கடமை எனக்குண்டாம்
ஏனவன் என்னோ டெழுந்தனன் என்பதற்குக்
காரணம் உண்டா? கடனுணர்த்தி யான்தடுத்தும்
ஆரணியம் வந்தான்! அமைதியாய் நின்றானா?
ஊர்போக மாட்டாமல் ஊனுறக்கம் எண்ணாமல்
நீர்போகப் போகும் நெடும்புனையாய் என்பின்னே
காலமெல்லாம் இன்னற் கடலைக் கடந்ததன்றி
ஞாலமிசை என்ன நலத்தை அவன் கண்டான்?

தன்னுடன் இன்பந் தனைவெறுத்த தியாகியவன்
என்கடன் ஏற்ற பணிசெய்வ தென்றிருந்தான்
சீற்றத்தைச் செய்துமன மாற்றமவன் கொண்டாலுந்
தேற்றமாய் அப்போதுஞ் செந்தண்மை உள்ளிருக்கும்
இன்னொருவர்க் காக இணையும் பரிவிருக்கும்
தன்னலத்தைச் சுட்டெரித்த தியாகத் தழும்பிருக்கும்
அன்னவனை அன்றி அடியேனைச் சுட்டியது
முன்னவன் என்ற முறையாலா?'' என்றுரைத்துச்
சீதையின் கேள்வனுஞ் சென்றான்! அவனடிப்
போதுகைக் கொண்டு பரதன் புறம்நின்றான்!

''வாழிய தியாகத்தீ வாய்புக நேர்ந்தவனே!
ஆழிசூழ் வையத்தை ஆளப் பிறந்தவனே!
ஊழ்தந்த ஆட்சி உரிமையை விட்டொதுங்கித்
தாழ்தந்து நோற்றுத் தமையன் திருவடிக்கே
பற்றுற்று மற்றென்றிற் பற்றற்று வாழ்ந்தவனே!
எற்றென் றியம்புவேன் நின்பெருந் தியாகத்தை!''

என்றேன் விழிநீர் இழிதர நின்றவன்றான்
மன்றாடு வான்போல் மறுப்பை நிறுவினான்!
கானாள மண்மகளைக் கைவிட்டுப் போனான்பின்
தானாகச் சென்றானோர் தம்பி! அவனிருக்க
நானுமொரு தியாகி! இது நல்ல கதையப்பா!
யானிப் பரிசேற்க யாதிவண் செய்தேன்?
இரவோ டிரவாய் எனைப்பெற்றாள் செய்த
கரவால் விளைந்த கரிசைத் துடைத்ததலால்
வேறேதுஞ் செய்தேனா? வெம்போரில் வீழ்ந்துபடும்
பேறேதும் பெற்றேனா? காடுறையப் போந்தேனா?
நாணற் படுக்கையிலே நம்பன் துயிலவொரு
கோணத்திற் காவற் குறுந்தூணாய் நின்றேனா?
கங்குலெல்லை காண்பளவுங் கண்ணை இமைக்காமல்
சிங்கநோக் காகச் செலுத்தியிருந் தேனா?
அடல்கட்டி ஆண்ட அழகான கையால்
குடில்கட்டிக் காட்டியொரு குற்றேவல் செய்தேனா?
உம்பரும் போற்றும் உயர்வுடைய கைவலியால்
அம்பி கடவி அரும்பணிகள் செய்தேனா?
எவ்வகை யாலும் இளையான் எனக்கிளையான்
செவ்வணம் நீயறிதி!'' என்றவன் சென்றுவிட்டான்.
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கருணனப்பால்
தோற்றத்தைக் காட்டினான்! சொற்புகழ்ச்சி செய்தேன்!


''இருந்துண்ட வீட்டுக் கிரண்டகம் இன்றிப்
பெருந்தொண்டு செய்த பெரியவனே! மாளா
வரம்பெற்ற அண்ணனின் வாழ்வொன்றே எண்ணி
உரம்பெற்ற போரில் உயிர்த்தியாகஞ் செய்தவனே!''
என்றேன்! அவனோ எதிர்ப்பு தெரிவித்து
நன்றாகத் தன்மதத்தை நாட்டவு முற்பட்டான்.
பல்வளங்கள் சூழ்ந்திருந்தும் பாழும்பெண் ணாசையினால்
அல்வழியே நாடினான் அண்ணன்! அவனுடனே
வேற்றுமைப் பட்டு வெளிநடப்புச் செய்யாமல்
சோற்றுக் கடன்கழிக்கத் துஞ்சியவன் யானப்பா!

தியாகிகளின் பட்டியலில் என்னையுஞ் சேர்க்காதே!
ஆகப் பலபேர் அதற்கென் றிருக்கின்றார்!
ஆனாலும் என்னளவில் அந்த இலக்குவனை
நானுந் தியாகியென நாட்டுவேன்! போரில்
உயிர்கொடுத்த தொன்றே உயிர்த்தியாக மென்றால்
செயிர்தீர் இலக்குவற்குஞ் சேருமே அச்சிறப்பு!

அண்ணனுக் காக அவனுமுயிர் விட்டானே!
எண்ணில் இடுக்கண்கள் ஏற்றானே! இன்னும்
ஒருமுறைக்கு மேலும் உயிர்விடுவான் போல
அருமருந்தால் புத்துயிர்பெற் றார்ப்பரித்து வந்தானே!
தம்பி உடையான் படைக்கஞ்சான் என்னுஞ்சொல்
அம்புவிக்குத் தந்தானே! அன்னவனே தியாகியப்பா!''
என்று தனதுரையை ஏற்பாய் முடித்துவிட்டுக்
குன்றென நின்ற குடக்காதன் போயொழிந்தான்!

நாலுபேர் கூற்றை நடுநிலையில் ஆராய்ந்தேன்!
மேலெழுந்த குற்றங் குறைகளை வேறெடுத்தேன்!
ஆகமொத்தங் கூட்டி அளவிட்டேன்! அவ்வளவிற்
காகுத்த னோடு கடைசிவரை பின்சென்ற
தம்பி அவனே தலைசிறந்த தியாகியென
நம்பி முடிவெடுத்தேன் நான்!

மூன்று



நாள்	17-5-1969
இடம்	புதுவைக் கம்பன் விழா
தலைமை	அ. சீநிவாசராகவன் அவர்கள்
பொருள்	கம்பனில் வள்ளுவம்

படையியல்

படையியல்

காராக வா! சுவைக் கண்டாக வா! கலைத்
தேராக வா! மலைத் தேனாக வா! நாவிற்
சீராக வாவென்று செந்தமிழை வேண்டினேன்
'சீராக வா' நினைச் சேர்ந்து

செவியுணர்வு மிக்கவராஞ் செந்தமிழ்ச் செம்மல்
கவியரங்கின் பண்பெல்லாங் கற்றோர்-புவியதனில்
ஓட்டக் குதிரையஃ துட்கார்ந்தால் ஊர்வலவன்
சாட்டை சொடுக்கித் தடவரல்போல்-பாட்டை
அவையோர் கவனிக்கா தங்குமிங்கும் பார்த்தால்
சுவையாய் எதையேனுஞ் சொல்லிக்-கவிநயம்
பெய்திட்ட தேனைப் பிழிந்து கொடுத்தவரைக்
கைதட்டச் செய்யுங் கணக்காயர்-எய்திட்ட
ஆகூழ்ப் பயனால் அருமைத் தமிழ்நாட்டின்
தாகூர்போல் வாழுந் தனிமுதல்வர்-நோகூரச்
செக்கிழுத்த வள்ளல் சிதம்பரனார் தம்பெயரைத்
திக்கனைத்தில் உள்ளோருஞ் செப்பிமகிழ்-பக்குவத்தில்
தூத்துக் குடிபிறந்த தொல்கலைக் கல்லூரி
காத்துக் குடிபுரக்குங் கண்ணுடையார்-ஏத்திவரும்

மாணவர் பட்டாளம் மண்டித் தொழும்வகையில்
ஆணவமே தோற்றத ஆசிரியர்-காணும்
விடைத்தாள் திருத்துவதை விட்டுவிட்டுக் கம்பன்
படைத்தாள் நலமதனைப் பார்க்கக்-கிடைத்தாரே
என்று மகிழ்ந்தே இருகை குவித்தவர்முன்
நின்று பணிகின்றே னின்று.

அம்புலிமேற் படையெடுக்க முனைந்திட்டார் அமெரிக்கர்
அதனுல் இந்த
அம்புவியில் முழுநிலவு தோன்ருது நின்றிடுமோ
அன்ன வாறே
கம்பனையே கட்டிக்கொண் டழவேண்டு மாவென்று
கரைவார் சில்லோர்
வம்பளந்து வந்தாலும் ஆண்டுதொறும் அவன்திருநாள்
மறையா தன்றே!

அருநூல்கள் தமிழ்மொழியில் யாத்தவர்பல் லாயிரம்பேர்
ஆன போதும்
இருநூல்கட் குரியார்தாம் தமிழுக்கே கதியென்ற
ஏற்றம் பெற்ருர்
ஒருநூலின் தாமுணரக் கதியில்லேன் உலகனைத்தும்
உயர்த்தும் அந்தப்
பெருநூல்கள் இரண்டினையும் முடிபோட்டுப் பாவாக்கிப்
பிணைக்கின் றேனே!

தொடுந்தோறும் ஊறுகின்ற தூயமணற் கேணியைப்போல்
தொடர்ந்து நாற்று
நடுந்தோறுந் தயங்காது விளைவருளும் நன்செய்போல்
நாளுங் கண்ணிற்
படுந்தோறும் புத்தழகு காட்டுகின்ற காதலிபோல்
பாட்டை நோட்டம்
விடுந்தோறும் விருந்துதவுங் கம்பனவன் கட்டிவைத்த
வீடு தானே!

ஆல்கொடுத்த விழுதென்ன ஆழ்கடலின் திரையென்ன
அகல்ஞா லத்துள்
நூல்கொடுத்த தமிழ்ப்புலவோர் நுண்ணறிவுப் பசியெடுத்து
நுடங்கும் போதில்
கால்கொடுத்துக் கைகொடுத்து மறையாக வள்ளுவனர்
கறந்து வைத்த
பால்கொடுத்து வளர்த்திட்டாள் தமிழன்னை தொடர்ந்தவர்கள்
பாடு தற்கே!

கொடைமாண்ட சடையப்பன் வரையாது தன்பொருளைக்
கொடுத்த தைப்போல்
தொடைமாண்ட செய்யுளிலே துறைமாண்ட புறப்பொருளைச்
சுவைகள் சொட்ட
நடைமாண்ட விருத்தத்தில் நலமாண்ட வள்ளுவத்தின்
நயத்தைக் கூட்டிப்
படைமாண்ட போர்க்களத்தைக் கம்பனைப்போல் விரிவாய்யார்
பாடு வாரே!

அப்படைச் சீரெலாம்
எப்படிச் சாற்றுவேன்!
ஒப்புறச் சிற்சில
செப்புவென் கேளிரே!

கம்பரொடு வள்ளுவரைக் கண்டு கவியெழுதும்
வம்பிலகப் பட்டேன் வழிசொல்லு வாயென்று
நண்பன் ஒருவனை நாடினேன் அன்னவனே
கண்துடைப்புச் செய்கின்ற கட்சித் தலைவர்போல்
பட்டணஞ் சென்றக்கால் பன்னூற் புலவரையுங்
கட்டணம் இல்லாமற் காணலாம் என்றுரைத்தான்.

அண்மையில் சென்னை அடைந்தேன் அவன்சொன்ன
உண்மையுங் கண்டேன்! உயர்நூற் புலவரங்கே
ஆயகற்ப காலம் அழியாது வாழ்வார்போல்
காயகற்பந் தின்ற கணக்கிலே நின்றார்கள்!

ஊரை வளைக்கும் உழிஞைப் படைமறவர்
போருக் கணிவகுத்தார் போல்நின் றுருள்ளே
உடல்கரையா வண்ணமாய் உப்பங்காற் றூடே
கடற்கரையில் நின்றிருந்த கம்பரைக் கண்டுகொண்டேன்
என்றுமுள தென்றமிழை ஏத்துமிசைக் கொண்டலே!

சென்றவிட மெங்குஞ் சிறப்புற்ற செம்மலே!
வானரத்தை வல்லரக்கர் தானையொடு மோதவிட்டு
மானுடத்தை வாகைபெற வைத்திட்ட வள்ளலே!
வள்ளுவரை யாப்புற வைத்த இடமெல்லாம்
விள்ளுவிரா என்றேன்! விளையாட்டாய்ச் சொல்லலுற்றார்.

''உந்துவண்டி தோறுமவர் ஊர்வலம் போவதன்றிச்
சந்தியிலும் நிற்கின்றார் சந்திக்கப் போ''வென்றார்.
பாட்டுத் திறத்தைநீர் பாலிக்க வேண்டுமெனில்
நாட்டு நடப்பை நவில்கின்றீர் ஐயா?

உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாந் தலையென்பர் அந்த
வெறுக்கை யனைத்தையும் வெங்களத்தே போட்டு
வெறுங்கைய னாக இலங்கையர்கோன் மீண்டானே
அந்த நிலையில் அடியேன் வெறுங்கையாய்
இந்த இடம்விட் டெழமாட்டேன் ஆகவே
கொண்டுசெல்ல ஏதுங் கொடுத்துதவ வேண்டுமென்றேன்!
விண்டுசொல்! யாதுநீ வேண்டும் பொருளென்றார்.

அச்ச நெடுமொழி வஞ்சி யருந்தும்பை
நொச்சி தழிஞ்சியொடு நூழிலாட் டென்று
புறப்பொருளாய் நீங்கள் புகன்றுள்ள வற்றுள்
சிறப்புடைத்தாய் ஏதேனுஞ் செப்புங்கள் என்றேன்!

புறங்கூறல் தீதென்று புன்னகை செய்தார்
அறங்கூறத் தானே அகம்புறம் பாடினீர்
அப்புறந் தீதெனல் ஆகுமா? சொல்லுமென்றேன்.
தப்பவழி யின்றித் தளைப்பட்டார் போல்நின்றார்.
அல்லமைந்த மேனி அழகன்முன் அன்றொருநாள்
தொல்லிலங்கை மாமன்னன் சொல்லிழந்து நின்றதுபோல்
தோற்றத்தைக் காட்டிய தொன்னூற் புலவர்வாய்
மாற்றத்தைக் காணவே மல்லுக் கிழுத்தேன்யான்!
சொல்லே ருழவரே! தோற்றுப் புறங்காட்ட
வில்லே ருழவர் விரும்புவரோ? சொல்லுமென்றேன்.

யார்புறங் காட்டினார் தம்பி! நான் யாத்துள்ள
சீர்பெறுங் காவியத்தைச் சேர்ந்தவர்க ளெல்லாம்
சூழலும் இசைவேண்டி வேண்டர உயிரைக்
கழலோடு போர்க்களத்தே கைவிட்டுப் போனதன்றி
மார்பினிற் புண்பட்டு மாண்டு விழுந்ததன்றி
யார்புறங் காட்டினார் யான்தந்த காதையுள்?
தன்னைப் புரந்த தமையன்கண் ணீர்மல்கக்
கொன்னே களம்பட்ட கும்ப கருணனா?
சாயும் உடலெங்குஞ் சல்லடைக் கண்ணாகக்
காயம் படவம்பு கண்டவதி காயனா?

வேகமாய் வந்த விசைப்பகழிக் கெல்லாந்தன்
ஆகமே ஆவமாய் ஆக்கியது மல்லாமல்
கைவேண்டி நின்ற கணக்கிலா அம்புகட்கும்
மெய்வேண்டித் தொட்டனவே வேண்டும் எனநகைத்தே

அந்தரத் தோங்கி அமர்செய்த ஆற்றலான்
மந்திரப் போர்வல்ல இந்திர சித்தனு?

வெள்ளெருக்க நீண்முடியான் வெற்பெடுத்த மேனிதனில்
எள்ளிருக்கச் சற்றும் இடமின்றி எங்கெங்கும்
ஊடுருவும் வாளிக் குரம்பெற்ற தன்மார்புக்
கூடுதான் ஏற்றதெனக் கூடுவிட்ட ராவணனு?
யார்புறங் காட்டினர்? யானறியச் சொல்லென்றார்.
நேர்வுற யானும் நினைவினல் ஈதுரைத்தேன்.

நீர்க்கோல வாழ்வை நிலையென்று நம்பியே
போர்க்கோலம் பூண்டு பொருதழிந்த வாளரக்கன்
மண்கவ்வ விட்ட மலையுடம்பின் கோலமெல்லாங்
கண்கவ்வக் காகுத்தர் காண அவன்முதுகிற்
பட்ட தழும்பினைப் பார்த்தவுடன் ஐயோநான்
கெட்டேன் புறங்கொடுத்த கேடனெடு போர்செய்தேன்!
என்று வருந்தி இனைந்த கதையெல்லாம்
ஒன்றும் உமக்கு நினைவில்லை போலுமென்றேன்!

பாடமதை நன்ருய்ப் படிக்கவில்லை தம்பி நீ!
விடணனர் சொன்ன விளக்கவுரை கேட்டியேல்
இப்படியோர் கேள்விக் கிடமுண்டோ? என்றறைந்தார்.

அப்படியா? என்றுநான் அப்பேச்சை மாற்றினேன்!
ஆன்ற கவிப்புலவீர்! ஆராய்ந்த கேள்வியோர்
நான்கே படையென்று நாட்டுவர்! ஆனல்நீர்
ஐந்தாம் படையும் அறிவித்த துண்டென்றேன்!
ஐந்தாம் படையுண்டா? அப்படைதான் யாதென்றார்?

காலாள்திண் தேர்புரவி கைம்மா இவற்றுடனே
வாலாட்டும் வானரமும் வாய்த்த படையென்றல்
எண்ணிக்கை ஐந்தன்றே என்றேன்! அதற்கவர்
எண்ணிக்கொள் ஆறுபடை யான்சொல்வேன் என்றுரைப்பார்

முன்னோர் வழிவந்த மூலப்படையொன்று;
துன்னி உதவுந் துணைப்படை மற்றொன்று;
நாடுறையும் வீரர்சேர் நாட்டுப் படையொன்று;
காடுறையும் வேடர்கொள் காட்டுப் படையொன்று;
கூலிப் படையொன்று; கூடார் படையினரைச்
சாலத் தொகுத்துச் சமைத்த படையொன்றும்
ஆகமொத்தம் ஆறு படையென்பர் ஆய்நூலார்!
நீகுறித்துக் கொள்ளென்றார்! நெஞ்சிற் குறித்திட்டேன்!

கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கும்
ஆற்றலார் மிக்க அவுணர் படைதான்
நிலைமக்கள் சால நிறைத்திருந்தும் வல்ல
தலைமக்கள் பல்லோரைத் தான்பெற் றிருந்தும்
ஒலிக்கும் எலிப்படையை நரகம் உயிர்த்துத்
தொலைத்ததொரு பாங்கில் சுவடின்றிக் கெட்டதென்றேன்!

பேராண்மை மிக்க பெருமலையின் ஊற்றத்தை
ஊராண்மை மிக்கதோர் எஃகம் உடைத்ததென்றார்.
ஊராண்மை என்றீர் உறுபொருள்தான் என்னென்றேன்.

யாராலும் வெல்லுதற் காகாத வல்லரக்கன்
ஆள்வலியும் தோள்வலியும் வாள்வலியும் அற்றுவிட
மாள்வலிக்கா ளாகி மதிப்பிழந்து நிற்கையிலே
நாளைவா போர்க்கென்று! நாயகனார் சொல்லியதோர்
வேளையில் காட்டிய வீரந்தான் ஊராண்மை
என்று தெரிவித்தார்! எப்போதும் உங்களுக்கு
நன்றி தெரிவிப்பேன்! நானென்றேன். அப்போதில்
யாரோடு பேசுகிறாய் என்று வழிநடந்தோர்
யாரோ குரல்கொடுக்க யானுந் திடுக்கிட்டேன்.

நண்ணியோர் யாரென்று நான்திரும்பிப் பார்த்தக்கால்
கண்ணெதிர் நின்றிருந்த கம்பர் சிலையானர்.
நிற்போர் நடப்போர் நிறைந்திருந்த சூழலிலே
சொற்போர் நிகழ்த்திய சூழ்ச்சி மனமென்னும்
பொல்லாக் குரங்கு புரிந்த விளையாட்டே
யல்லாமல் வேறில்லை என்ப தறிந்துணர்ந்து
கம்பர் திருமுன் கடைசியாய்க் கைகூப்பித்
தெம்பொடு மீண்டேன் தெளிந்து!

நான்கு



நாள்	28-3-1972
இடம்	காரைக்குடி கம்பன் விழா
தலைமை	கவிஞர் கண்ணதாசன்
பொருள்	கம்பன் என்றொரு முரணியன்
	ஆறிய சினத்தன்

ஆறிய சினத்தன்

''எக்காலுங் குடிவைத்த புதுவை விட்டே
இன்னறவு பொழிகம்பன் சுவையைப் பாட்டில்
இக்காலைக் குடிவைத்த எம்மூர்'' வா!''வென்
றிக்காரைக் குடிகொண்டார் எனைய ழைத்தார்!
முக்காலுங் கம்பங்கூழ் குடிக்கும் ஏழை!
முதன்முதலில் நிறுவியநற் கம்பன் கோயில்
அக்கார வடிசிலது கிடைக்கப் பெற்றால்
அதைவிடவே றெனக்கென்ன வேண்டும் இங்கே!

செங்கற்கள் அடுக்குதல்போல் சொற்கள் கூட்டிச்
சேர்த்தெழுதிப் படப்பாட்டு தருவார் முன்னே!
எங்கிருந்தோ ஒருமாயக் கண்ணன் வந்தான்!
இசைக்கின்ற சொல்லெல்லாந் தேனைச் சொட்டுஞ்
சங்கத்துப் பாட்டாகச் சமைத்தான்! அந்தத்
தங்கத்தைத் தனிமுத்தைக் கவிக்கு லத்தின்
சிங்கத்தை இன்றைக்குக் கண்டு கொண்டேன்!
செந்தமிழர்ச் சனைசெய்து வணங்கு கின்றேன்!

தனங்கொண்டு கொடுத்துப்பின் புகழைக் கொள்ளுந்
தமிழ்ச்சந்தை தனிற்பண்ட மாற்றுச் செய்யும்

இனங்கொண்டு புகழ்கொண்ட திவ்வூர் இங்கே!
என்பாட்டுக் கடியேனுங் கடைவி ரிக்கக்

கனங்கொண்ட பொருள்தேடிக் காத்தி ருந்தேன்
கம்பனது பேரேட்டிற் பற்று வைத்தார்

சினங்கொண்டு வரச்சொன்னர்! கணக்குப் பார்த்துச்
செலவேற்று வரவுற்றேன் கடனைத் தீர்க்க!

ஆற்றுக்குள் நீரில்லை என்றால் அஃதவ்
வாற்றினது பிழையில்லை! இந்த நாளில்

சோற்றுக்குள் சத்தில்லை என்றால் அஃதச்
சோற்றினது பிழையில்லை! அடியேன் கொண்ட

சீற்றத்திற் சூடில்லை என்றால் இந்தச்
சிறியேனின் பிழையில்லை! சினத்தை நன்றாய்

ஆற்றிவிட்டு வரச்சொன்ன சா.க ணேச
அண்ணாவின் பிழையாகும்! யானென் செய்வேன்!

சொற்கடலுக் கெல்லையொன்று தேர்ந்தான் பாட்டு
சொல்லரிய முரண்பாட்டுச் சுவையின் கூட்டு!

வெற்பெழுவான் இன்றியங்கே வெயிலெ ரிக்கும்
வெம்புலிகள் மானுக்குப் பால்கொ டுக்கும்!

கற்பகத்தின் மாலையிலும் புலவு நாறும்!
கற்பென்னுங் கனலுக்குள் கண்ணீர் ஊறும்!

தற்பரமாந் தலைவர்க்கும் வெகுளி ஏறும்
தணல்மலைபோல் எழும்வெகுளி கணத்தில் ஆறும்!

கருப்புற்ற கடல்வண்ணன் கதையைக் கூறுங்
கம்பன்சொற் கலைக்கூத்தில் முகிலோ என்னக்

கருப்புற்றோன் கால்பட்டால் சிலையாய் நின்ற
கல்லுக்கும் உயிர்பிறக்கும்! மணியோ என்னக்

கருப்புற்றோன் கைபட்டால் தூக்கலாகாக்
கனவில்லுந் துண்டாகும்! மையோ என்னக்

கருப்புற்றோன் கண்பட்டால் சினத்தி னாலே
கருப்புற்ற மனமெல்லாம் வெண்மை யாகும்!

புனத்திடையே வாழ்கின்ற ஆமை வந்து
புகுந்திட்ட வீடுகுட்டிச் சுவராய்ப் போகும்!

மனத்திடையே சினவாமை குடியி ருந்தால்
வானுயருங் கோபுரமாய் உயரும் நெஞ்சம்!

சினத்திடையே ஒருகூனி மனத்தைச் சேர்த்தால்
சேர்ந்தஇடம் பாழ்நரகச் சூழ லாகும்!

வனத்திடையே சினமவிந்த வள்ளல் சென்றால்
வழியெல்லாந் துறக்கத்தின் வாயி லாகும்!

மாறுவது மனமாகும்! முக்கு ணத்தால்
மயங்குவதும் உலகாகும்! கூனி வாயாற்

கூறுவது விதியாகும்! கேக யத்தாள்
கூட்டுவது வினைவாகும்! வரத்தி னாலே

மீறுவது முறையாகும்! அதனால் முன்னோன்
மேவுவது வனமாகும்! உடன்பி றந்தோர்

ஆறுவது சினமாகும்! அதுதான் அந்த
அயோத்தியா காண்டத்தின் சிறப்பு மாகும்!

அடங்காத கடுங்கோபம் வந்தால் நல்ல
அறிவென்னும் ஆற்றுக்குக் குறுக்கே தோன்றிக்

கடன்காரன் போல்மறிக்கும்! தெளிவென் கின்ற
கண்ணாடி போட்டதனை உற்றுப் பார்த்தால்

மடங்காத கடுஞ்சினமு மடங்கும்! நெஞ்சம்
வண்டிவரக் கைகாட்டி இறங்கி யாங்குத்

தடங்கானில் வழிகாட்ட முந்தி நிற்கும்!
தலைவன்றன் சந்நிதியிற் கொண்டு சேர்க்கும்!

வெள்ளெழுத்து வந்துற்ற கண்க ளுக்கு
வெண்பூண்டு வெங்காய மாகத் தோன்றும்!

வெள்ளமெனச் சினங்கொண்ட உள்ளத் துக்கு
வெள்ளைமனங் கள்ளமன மாகத் தோன்றும்!

முள்ளையெடுப் பதுபோல முனிவி கந்த
முதல்வன்சொல் லுந்திருவாய் மொழியி னாலே

உள்ளிருக்குஞ் சினமவிந்தால் உண்மை தோன்றும்!
உற்றவர்யார் மற்றவர்யார் தெரிந்து போகும்!

குடிக்கின்ற நோய்க்கஞ்சி ஆறிப் போனால்
குறைந்துவிடுஞ் சுவைகொஞ்சங் கொஞ்சமாக!

வெடிக்கின்ற பெருவெகுளி ஆறிப் போனால்
விளைந்துவிடும் வெற்றியின்மேல் வெற்றி யாக!

துடிக்கின்ற உயிர்நாடி அடங்கிப் போனால்
தொங்கிவிடுந் தலைமுடிதன் அடியிற் சாயும்!

தடிக்கின்ற பெருவெகுளி அடங்கிப் போனால்
தலைவன்றன் திருவடிகள் முடிமேல் ஏறும்!

மூக்குக்கு மேல்கோபம் வருஞ்சி லர்க்கு!
முறைதவறும் பெண்பாலார் முன்னே வந்தால்

மூக்கறுத்து விடுவார்கள்! உலையில் முட்டி
மோதுகின்ற கொதிசோறு போல்கு திப்பார்!

தாக்கவெழுஞ் சினத்தினரவ் விளையோர் தாமுந்
தாரையைப்போல் தாயரைப்போல் பெண்கள் வந்தால்

ஆக்கிவைத்த பழஞ்சோருய் ஆறிப் போவார்!
அழைக்கவரும் மாமியர்முன் மாப்பிள் ளைபோல்!

காமமெனுந் தீவட்டி எரியும் போது
கனல்கின்ற சினமென்னுங் கொள்ளிக் கட்டை

நாமமது கெட்டாற்போல் ஆறி நிற்கும்
நல்லவர்கள் காமத்தைத் தணிக்க வந்தால்

ஊமையென ஒளிந்திருந்த சினந்தான் முன்னே
ஓடிவந்து காமத்துக் கெண்ணெய் ஊற்றும்

ஆமிந்த உண்மைதனைக் காண வேண்டில்
ஆராய்ந்து பாருங்கள் இலங்கைக் கோவை!

ஏறவிட்ட கடுஞ்சினத்தை இறக்கி னுற்போல்
எழுகின்ற பெருஞ்சினத்தை வல்ல ரக்கன்

ஆறவிட்டாற் போலவொரு தோற்றங் கொள்வான்!
அவாவுற்ருேன் ஒருபோதும் ஆற மாட்டான்!

நீறுவிட்ட நெருப்பைப்போல் உள்ளுக் குள்ளே
நிறைந்திருக்கும் அச்சினந்தான் தலைகள் பத்துங்

கூறுபட்டுப் போகவிட்டும் உயிரை முற்றுங்
குடித்துவிட்ட பின்னேதான் முற்றும் ஆறும்!

அக்கால மாதர்களோ மஞ்சள் பூசி
அழகான முகத்துக்குப் பொலிவு சேர்த்தார்!

இக்கால முதியவரும் இளையோர் போல
எதையெதையோ பூசுகின்றார் பொலிவு சேர்க்க!

முக்கால முங்கடந்த முதல்வன் வாளி
முடித்திட்ட செருக்களத்துத் திருமண் பூசி

முக்கோடி வாணாளான் முனிவ டங்கி
மும்மடங்கு முகத்துக்குப் பொலிவு சேர்த்தான்!

''தன்றுணையைப் பிரிந்தாலும் முதல்வ ரான
தலைவர்க்கு வெகுளிவரல் தக்க தாமோ!''

என்றொருவர் எனைக்கேட்டார்! அந்த நண்பர்
எத்தகையர் என்றெனக்குத் தெரியும்! அன்னார்

இன்றுணையாள் பிறந்தகத்தில் இரண்டு நாட்கள்
இருந்துவிட்டு வந்தாலே பொறுக்க லாகா

அன்புடைய கணவரவர்! அவர்தாம் என்பால்
ஆறாத சினங்கொண்டார் போலக் கேட்டார்!

கொன்றன்ன இன்னாவைச் செய்தான் வீணைக்
கொடியோனும் தொல்லிலங்கை வேந்தன் அன்று

நின்றனனே போர்க்களத்தில் தனியாய்! அந்த
நிலையினிலே காகுத்தன் என்ன செய்தான்?

''இன்றைக்குப் போய்ப்போர்க்கு நாளை வா''வென்
றியம்பினனே அதுவன்றோ குணமென் கின்ற

குன்றத்தின் மேலேறிச் சினமென் கின்ற
குரைகடலை ஆற்றியபே ராண்மை யாகும்!

தலையொன்று தான்கொடுத்தான் குமண வள்ளல்!
தசையொன்றும் உடல்முழுதுங் கல்விக் கான

விலையென்று கொடுத்தவராங் காரைவள்ளல்!
விலையில்லா மணியாக விருத்தப் பாடற்

கலையொன்று மனைகட்டக் கம்ப னுக்குக்
கைகொடுத்தான் திருவெண்ணெய் நல்லூர் **வள்ளல்!**

அலையொன்று சினமென்னுங் கடலைத் தாண்டி
ஆறியவன் கோசலநா டுடைய வள்ளல்!

மனமென்ப தொருகோயில் அங்கே மண்டி
வளர்கின்ற சிறுநெருஞ்சிக் காடே இந்தச்

சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி! குத்துஞ்
செடியங்கே தலைகாட்டா வண்ண மாகத்

தினமும்நாம் உழவாரப் பணிசெய் தக்கால்
செய்திருப் பாதநடம் ஆடுந் தில்லை


வனமாகும் மலர்மிசையே ஏகி னன்றன்
மாணடிகள் சேர்ந்ததிரு வரங்க மாகும்!

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்புகழைப் பாடுந் தொண்டர்

இனத்தகத்தான் கம்பரடிப் பொடியார் உள்ள
இடத்தகத்தான் செந்தமிழ்த்தேன் ஆறு பாயும்

புனத்தகத்தான் தமிழர்வாழ் நாடு தோறும்
புக்ககத்தான் அறந்தோற்க நேர்ந்த காலைச்

சினத்தகத்தான் அறம்வெல்லச் சினத்தை மாற்றுஞ்
சிறப்பகத்தான் கம்பனவன் நாமம் வாழ்க!



ஐந்து



நாள்	14-5-1972
இடம்	புதுவைக் கம்பன் விழா
தலைமை	கவிஞர் கண்ணதாசன்
பொருள்	என்னோடு இணைந்த கம்பன்

கம்பன் என் காதலன்

கம்பன் என் காதலன

கம்பன் மேல்நான் காதல் கொண்டேன்!
காய்ச்சல் என்மேல் காதல் கொண்டது!
நல்ல காய்ச்சல் நான்கு நாளாய்க்
கொல்லுகொல் லென்று கொல்லுகின்றது; ஆயினும்
ஏரு பெரிசா ஊரு பெரிசா
காதல் தானே பெரிசெனக் கண்டு
தொண்டை கட்டினுந் தொண்டை விடாமல்
மூக்க டைத்தாலுந் தாக்குப் பிடித்துக்
காதலை நாடகம் ஆட வந்துளேன்!

காய்ச்சல் தவிர்த்த கால மழைபோல்
பக்கத் துணையாய்ப் பக்கத்தி லிருக்கும்
தாயின் தாளே கதியென நம்பி
அந்தப் புறத்தில் வந்து நிற்கும்
கம்ப னோடு காதல் பண்ணுவேன்!

காதல் காட்சியைக் கண்டு ரசிக்க
வந்துளீர் அனைவர்க்கும் என்றன் வணக்கம்!

பாட்டுக் குயில்கள் பயின்ற புதுச்சேரிக்
கூட்டிற் குடித்தனஞ் செய்யவந்த கோமகனே!
தைப்பாவை யாராட மெய்ப்பாட்டி னுலவரைக்
கைப்பாவை யாக்குங் கலைக்காதல் மன்னு!
வனவாசஞ் செய்து மனமாற்ற மெய்திப்
புனலாடி வந்த புதுத்தென்றல் தேர்வேந்தே!
ஏரிழுத்த காளை பசுவோ டிணைந்துவிடத்
தேர்செலுத்தித் தூதுக்குச் செல்லும் மணிவண்ணு
கட்டாணி முத்தையா! கண்டையா உன்கவிதை
தட்டாகப் போய்க்கதவு தட்டாத வீடுண்டா
ஊடலால் இன்றுவரை, ஒட்டாமல் உள்ளவரைக்
கூடலிற் காணக் குழலூதுங் கண்ணு நீ
மட்டாய்ச் சுவைத்த புதுவை மதுவைப்போல்
மட்டாய்ப் புகழ்ந்து வணங்கினேன் பாட்டைக்கேள்!

கம்பனைக் கற்றதனுற் காதலிக்கக் கற்றவன்யான்
நம்புங்கள் என்று நடுவாய் எனைவைத்துக்
கூட்டத்திற் காரைக் குடியிலே பாடினையே!
பாட்டரசே! அந்தப் பாட்டு நினைவுண்டா!
அன்றே எனக்குமோர் ஆவல் எழுந்தது!
முன்பே எனக்கும்அம் மூத்தார் தமக்கும்
நடந்ததொரு காதல் நாடகத்தைச் சொல்லாற்
படம்பிடித்துக் காட்டப் பழிகிடந்தேன். இங்கே
இடங்கிடைக்க வந்தேன்! இனியுந் தாழ்த் தாமல்
தொடங்குகிறேன் கேளாய் தொடர்ந்து!

கோளரிகள் அரசாண்ட காலம் மாறிக்
கோல்வளையார் நல்லாட்சி செய்யும் இந்த
நாளையிலே என்னென்ன அதிச யங்கள்
நடக்குமென யாராலே சொல்லக் கூடும்!
காளையெலாம் பசுவாக மாறக் கூடும்!
காமத்தால் முறுக்குற்ற தலைவர் வன்மைத்
தோளையெலாம் மெல்லியர்தோள் தோற்க டிக்கும்!
துறவிக்கும் பதவியின்மேல் காதல் பூக்கும்!

நாணெல்லாம் பெண்மைக்குப் பகையாய் மாறும்
அப்பெண்மை ஆடவர்க்கு நகையாய் மாறும்
மாணவியர் காற்சட்டை போட்டுக் கொள்வார்
மாணவர்கள் நெடுங்கூந்தல் வளர்த்துக் கொள்வார்
ஆணெல்லாம் பெண்ணாக மாற வந்தோ
ஆடவரை ஆடவரே காதலிப்பார்!
வீணில்ஏன்? இவையெல்லாம்! இப்போ திங்கே
மேடையிலே நடப்பதென்ன! விளங்கிக் கொள்வீர்!

பல்லே முளையாப் பசுங்குழவி செங்கரும்பை
மெல்லக் கடித்துச் சுவைக்க விழைந்தாற்போல்
யாப்பணியில் ஒன்றும் அறியாத முன்னுளில்
பாப்புனைந்து நானும் பதவி பெறமுயன்றேன்
பிஞ்சிலே வெம்பிப் பெயர்ந்துவிழும் மாவடுப்போல்
நெஞ்சில் அரும்பா நிறையும் நினைவுகட்குப்
பாவாடை கட்டிப் பலவகைத் தாவணியை
மேலாடை யாக்கி மினுக்க விருப்புற்றேன்!
என்பாட்டுக் கேதோ எழுதுவேன்! மற்றவர்கள்
பின்பாட்டோ கால்கைப் பிடிபாட்டோ வேண்டேன்!
மணல்வீடு கட்டி மகிழுஞ் சிருர்போல்
உணர்வில் கவியெழுதி உள்ளங் களிப்புற்றேன்!
கோடுகள் எல்லாமே கோலங்கள் ஆய்விடுமா?
ஏடுகள் எல்லாமே இன்னிசைநூல் ஆய்விடுமா?
கூட்டத்திற் போட்டுக் குவித்தமலர் மாலைகளில்
வீட்டுக்குப் போந்தால் வெறும்நாரே மிஞ்சுதல்போல்
பாட்டென்று நானும் படைத்தவற்றில் வெற்றுச்சொற்
கூட்டம் இருக்கும்உயிர் ஓட்டம் இருக்காது.
நன்னூல் உடையணியா நாடோடிக் கூட்டம்போல்
தொன்னூல் மரபு தொடுகடலின் முத்தறியா
இப்பிக் கவிதைகளை இன்றுவடிக் கின்ருரே!
அப்புன் கவிதைகளை அன்றைக்கே யான்பார்த்தேன்!
உற்ற வயதுவர உட்கார்ந்தேன் மூலையிலே
சிற்றில் சமைத்திருந்த செய்கையை எண்ணினேன்!

நாணம் பிறந்தது!   நல்ல கவிபுனைந்த
ஆணழகன் தோளை அவாவுதற் காளானேன்.
அப்போது தானென் அகத்தில் அதுவரைமுன்
எப்போதுங் காணு இறைக்காட்சி ஒன்றுகண்டேன்!

உலகம் யாவையுந் தன்வய மாக்குமோர்
அலகி லாக்கவி ஆரங்கள் தாங்கிய
இலகு பேரெழில் மானிடன் என்முனே
தலைவன் என்னுமோர் தன்மையில் நின்றனன்!

யாரோ இவர்யாரோ என்றென்று நான்வியக்க
வாராது வந்துற்ற மாமணியான் வாய்மொழிந்தான்
ஏரெழுப துஞ்செலுத்தி என்றுமுள தென்றமிழின்,
பாரகலந் தானுழுத பாட்டாளி யானென்றான்!
சாதிப் பொருத்தஞ் சரிதான்! எனினுமுள்ள
மீதிப் பொருத்தமு மேவுமோ என்றுநான்
ஓரக் கண் ணாலவனை உற்றுற்றுப் பார்த்தாவல்
தீர அவனழகைத் தின்றுதின்று தீர்த்திட்டேன்!

சீரழகா வந்து சிறந்த வடியழகா
ஆரழகும் ஒவ்வா அவனழகுக் கேயழகாப்
பேரழகு செய்யும் பிறவுறுப் பொவ்வொன்றும்
ஓரழகு காட்டவுநான் உற்றநிலை என்சொல்வேன்!

தோள்கண்டேன் தோளே கண்டேன்
துணைவிழி மயங்க அப்பால்
தாள்கண்டேன் தாளே கண்டேன்
தமிழ்வளம் எல்லாங் கண்டேன்!
வேள்கொண்ட பகழி என்மேல்
விழக்கண்டேன்! சமயம் பார்த்துக்
காழ்கொண்ட காதல் நெஞ்சம்
கையுறை வேண்டக் கண்டேன்!

ஆய்மயில் போல நானும்
அன்னவன் அணைப்பிற் கேங்கிப்
போய்மயல் விளங்கித் தோன்றப்
புதியதோர் முறுவல் பூத்தேன்!
தூய்மைசேர் தமிழ்ப்பண் பாட்டில்
தோய்ந்தவன் போலே அன்னோன்
சேய்மையில் எட்டி நின்று
சிறியதோர் முறுவல் செய்தான்!

எண்ணரு நலத்தினான் இனையன் நின்றுழிக்
கண்ணொடு கண்ணினை கவ்வி ஒன்றையொன்
றுண்ணவும் நிலைபெரு துணர்வும் ஒன்றிட:
அண்ணலும் நோக்கினான் யானும் நோக்கினேன்!

பருகிய நோக்கெனும் பாசத்தால் பிணித்
தொருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்
பெருங்கவி மன்னனும் பேதை யேனுமங்
கிருவரும் மாறிப்புக் கிதயம் எய்தினோம்!

அன்றுதொட் டெங்களின் அன்பு விளையாட்டு
குன்று வளர்பிறைபோற் கூடியதே-என்றுமவன்
வண்ணங்கள் பற்பலவாய் வாரி வழங்கவே
பண்ணிசையிற் பாடிப் பதந்தருவான்-எண்ணுலகைக்
காலால் அளந்தான் கலையழகைப் பாவூடு
நூலால் அளக்குங் கலைநுவல்வான்- மாலாய்யான்
வீட்டுள் இருக்கின்ற வேளையெலாந் தன்னைப்போல்

பாட்டெழுதச் சொல்லிப் படுத்துவான்- பாட்டைவிட்டு
வீட்டுக்குத் தூரமாய் வெற்றலுவல் தாள்குப்பைக்
காட்டுக்குப் போனாலுங் கைவிடான்- கேட்டுவக்கப்
பஞ்சவடியினிலே பாட்டொன்று பாடென்றால்
கொஞ்ச வடி நான்கு கொடுத்திடுவான்- நெஞ்சினிக்க
அம்மானைப் பற்றி அருளென்றால் ஆங்கவனே
எம்மானைப் பாடி இசைத்திடுவான்-சும்மா
படகிலே வந்த பயங்காட்டி என்னை
அடகுவைக்கச் சொல்லி அயர்வான்- நெடுநாளாய்
இவ்வாறு கம்பனுடன் யான்நடத்தும் நாடகத்தை
எவ்வா றறிந்தனரோ ஏனையோர்-அவ்வளவில்
ஊரார் அலர்தூற்ற ஒட்டிய நட்பினரும்
பாரா விருந்தார் பகைத்து.

விருத்தன்தான் கிடைத்தானா காதல் பண்ண!
விளையாடுங் குழந்தையையுங் காதல் செய்யேன்!
கருத்தொருவர் இவ்வாறு தெரித்தார்! ஐயா!
காலத்தால் மலர்ந்துமல ராதி ருக்குங்
குருத்தோடு நரைத்தவர்கும் மாளம் போடுங்
கூத்தாடிக் காதலல்ல இந்தக் காதல்!
இருத்துங்கள் மனத்தினிலே! எங்கள் காதல்
இலக்கியக் காதலிது மாறா தென்றேன்!

கம்பனையா காதலித்தாய்! ஐயோ! இந்தக்
காலத்தில் இப்படியா! மேலை நாட்டான்
அம்புலிக்குச் செல்கின்றான்! உனக்கோ இங்கே
அப்பாவிக் கிழக்காதல்! என்றெ ருத்தர்
வம்பலராய் வந்தார்! நான் என்ன சொல்லி
மறுத்தாலும் அவர்கேளார்! இறுதி யாக
எம்பிராட்டி தமிழன்னை உள்ள மட்டும்
எந்தைபிரான் கம்பனையான் மறவேன்! என்றேன்.


கோளுரைகள் இவ்வாறு கூடிவர நானுமொரு
சூளுரையை மேற்கொண்டேன்! சொல்லுகிறேன்! கேளுங்கள்!


அறந்தலை நிற்பதுவும் ஆகாது தீதென்றால்
கறந்தபால் திரிந்ததுபோல் கலையட்டும் என்காதல்!
அடுத்தவன் உடைமையினை அகப்படுத்தல் அறமென்றால்
தொடுத்தவன் கணைபோலத் தொலையட்டும் என்காதல்!
பிறன்மனை விழையாத பேராண்மை தீதென்றால்
இறந்தவர் உயிர்போல ஏகட்டும் என்காதல்
என்றேன் முடிவினை எல்லார்க்குஞ் சொல்லிவிட்டேன்!
இன்னும் இறுதியாய் யான் சொல்வ தென்னவெனில்

ஊழி வரினும் உலகம் புரண்டாலும்
ஆழி வறண்டாலும் அறமே குறித்த
இலக்கை உடையவன் என்கம்பன் ஆனால்
இலக்கேஇல் லாமல் இருப்பார் பலகவிஞர்!
நேற்றோ அவர்கவிஞர் இன்றோ வெறுஞ்சுவைஞர்!
ஆற்றோடு போன விதைதான் அவர்கவிதை!
அப்படியா என்கம்பன்! ஆயிரமாண் டானாலுந்
தப்பு சொலமுடியாத் தங்கப் புதையலவன்!
என்றும் அவனிருப்பான் என்னுளத்தில்! அன்னவன்பால்
அன்றன்று நான்கண் டனுபவித்த இன்பத்தின்
சேதியெலாம் இங்கே தெரித்தல் சரியில்லை!

நீதியில்லை நானின்னும் இங்கேயே நின்றிருத்தல்!
காலங் கடத்திவிட்டேன்! கம்பன் கவிதைப்பூஞ்
சோலையிலே காத்திருப்பான்! சொக்குப் பொடிபோடக்
காதலி வாராளோ என்றுவழி பார்த்திருப்பான்!
ஆதலால் செல்கின்றேன் அங்கு!

❁





நாள்	13-5-1973
இடம்	புதுவை-கம்பன் கலையரங்கம்
தலைமை	அ. சீநிவாசராகவன் அவர்கள்
பொருள்	மாண்புமிகு கம்பன்

தொண்டின் மாண்பு

தொண்டின் மாண்பு

கவிவாணர் புடைசூழ்ந்து மொய்க்கின்ற சீனி - இது
கம்பரசம் அள்ளியுண்ட தெள்ளுதமிழ்த் தேனீ

தவமார்ந்த குடியினிலே மிதிலையிலே வாசம் - அங்கே
தமிழ்வானிற் சிறகடித்துப் பறப்பதிலோர் பாசம்

அவையோர்தஞ் செவிகுளிரப் பாடுமொரு ராகம் - இதற்கு
அனைவரையுங் கைதட்டச் செய்வதிலோர் மோகம்.

துவளாத தொண்டுகிழ 'நாணல்' இதன் முன்னே - சிறு
தொண்டன்யான் தலைதாழ்த்தி வணங்குகிறேன் இன்னே!

விடுமுறைநாள் என்ருலும் வேலை பார்க்க
விரைந்துவரும் அரசாங்க அலுவ லார்போல்

''கெடுபிடிகள் பலவிருந்துங் கம்பன் என்ருல்
கேட்பதற்கு வந்திடுவோம் நாங்கள்'' என்ற

நடைமுறையை வைத்துள்ள நகரத் தாரே!
நகர்விட்டு நகர்வந்து கம்பனுக் கோர்

எடுபிடியாய்த் தொண்டு செய்ய இசையும் உங்கள்
எல்லார்க்குந் தொண்டன்யான்! வணங்கு கின்றேன்.

அடுத்தவிழா எப்போது கம்ப னுக்கென்[று]
ஆயிரமா யிரம்பேர்கள் கேட்கு மாறு
மிடுக்காக விழாவெடுக்கும் புதுவைக் கம்பன்
கழகத்து விழாக்குழுவை வணங்கு கின்றேன்.
அடுக்களையில் அன்றாடம் செய்யும் தொண்டை
அரைநாளைக் கொதுக்கிவைத்துக் கம்பன் தொண்டில்
பிடிப்புற்ற தாய்க்குலமே! மற்று முள்ள
பெரியோரே! நண்பர்களே! வணங்கு கின்றேன்.

வணங்குகிறேன் வணங்குகிறேன் என்றெ தற்கு
மறுபடியு மறுபடியுஞ் சொன்னே னென்றால்
வணங்குவதில் தானுளது தொண்டின் மாண்பு
வணங்காத முடியினர்க்குத் தொண்டு வேம்பு
வணங்குகின்ற செடியில்தான் கதிர்கள் முற்றும்
வணங்காத செடிகளிலே பதர்தான் பற்றும்
வணங்குவதே பணியாக இருந்தோ ருக்கே
வான்புலவர் தொண்டரெனப் பட்டந் தந்தார்

ஏலத்தில் விலைகூறி எடுப்ப தைப்போல்
எவரெவரோ பட்டங்கள் வாங்கும் இந்தக்
காலத்தில் கவிச்சக்ர வர்த்தி யான
கம்பனையும் விடவில்லை பட்டத் தாசை!
ஞாலத்தில் இன்றுள்ள பட்டங் கட்குள்
மாண்புமிகு பட்டந்தான் பெரிய தென்று
சாலத்தால் அதைப்பெறுதற் கிதுதான் தக்க
சமயமெனப் புதுவைக்கு வந்தான் போலும்!

மந்திரியா யில்லாத ஒருவ னுக்கு
மாண்புமிகு பட்டமென்ன! இலேயைப் போட்டுப்

பந்தியிலே குந்தவைத்தாற் போலி ருக்கும்
பாவலர்கள் வாழ்த்தென்ன! இதுபோல் இன்னும்
இந்திரசா லங்களெலாம் நிகழ்த்திக் காட்ட
இருக்கின்ருர் ஒருகிரியார் என்ருல் இங்கே
விந்தையிது போல்ஒன்ரு நடக்கும் இன்னும்
விசித்திரங்கள் பலநடக்கும் ஆண்டுதோறும்!

காண்பரிய கம்பனது தொண்டைக் காணுங்
கணக்கென்ன எனக்கேட்டால் இவ் வாருக
வீண்புரளி சொல்லியதென் மனக்கு ரங்கு
'விடலேமன மேஇதுதான் தொண்டா?' என்றேன்
மீண்டுமது பேசியது ''பாட்டுத் தொண்டா!
மெய்யாகச் சொல்லுகிறேன்! மேடை தோறும்
வீண்புரளி சொல்வதைத்தான் இன்று நாட்டில்
மிகப்பெரிய தொண்டாக மதிக்கின் ருர்கள்!

பேசுவது தான்இன்று பெரிய தொண்டு!
பிடிக்காத தலேவர்களேத் தாக்கித் தாக்கி
ஏசுவதோ அதனேவிடப் பெரிய தொண்டாம்!
எடுத்ததற்கெல் லாங்கூட்டம் போட்டுக் கேட்கக்
கூசுகிற சொற்பதரைக் கொட்டித் தூற்றிக்
குரைப்ப தெலாந் தொண்டான இந்த நாளில்
மாசகன்ற தொண்டெங்கே? அதுகொ டுக்கும்
மாண்பெங்கே? என்றுமனம் வாதா டிற்று.

நமக்கெதற்கு வீண்வம்பு மனமே! நாட்டில்
நடக்கின்ற அவலத்தை யெல்லாம் சொல்லித்
தமுக்கடிக்க வாநம்மை அழைத்தார்! கம்பன்
தமிழமுதைப் பாட்டுலேயில் அள்ளிப் போட்டுச்
சமைத்ததனைப் பரிமாற அழைத்தால் நீயோ
சமுக்காளம் சரியில்லை என்ருய்! குற்றம்
சுமத்தியது போதுமினி! போபோ! கம்பன்
தொண்டர்களை நானேபோய்க் கண்டு கொள்வேன்.

பொருளோடு பாடாமல் எதற்கோ சண்டை
போடுகிருேம் என்பதுபோல் அவையில் உள்ளோர்
ஒருவாறு பார்க்கின்ருர்! மனமே! மேலும்
உன்னேடு பேசுவதிற் பொருளே இல்லை!
தெருளார்ந்த கம்பனின் தொண்ட ருக்குள்
சிறந்தவரை நான்பார்த்துக் கொள்வேன் என்று
மருள்தீர அரங்கத்தைப் பார்த்தேன்! இங்கே
மாண்புமய மாயெல்லாம் இருக்கக் கண்டேன்!

மாண்புகள்! மாண்புகள்! எங்கு நோக்கினுங்
கம்பன் கட்டிய காப்பியக் கோயிலுள்
காண்பவை யாவும் மாண்புடைத் தூண்களே!
அவற்றுள்,
பத்து மாண்புகள் பறித்து வந்து
கொத்தாய்ப் பழுத்த கொடிமுந் திரியின்
சாறெடுப் பதுபோல் சாறெடுக் கின்ருர்
மாண்புகட் கெல்லாம் பெரிய மாண்பாய்
எதனைச் சொல்லலாம் என்று பார்த்தேன்.

அவரவர்க் கவரவர் மாண்பே பெரிதெனச்
சொல்லுதல் யார்க்கும் எளிதுதான்; ஆயினும்
நடுவராய் ஔவையை நாடிக் கேட்டேன்!
தொண்டின் மாண்பே பெரிதெனச் சொன்னுள்.
எப்படி என்றேன்! செப்பு கின்ருள்!

உலகம் பெரியது! அந்த உலகமோ
இறைவ னிடத்தில் அடக்கம் இறைவனே
தொண்ட ருள்ளத் தொடுக்கம் எனவே
தொண்டின் மாண்பே பெரிதெனக் காட்டிப்
பட்டி மண்டபத் தீர்ப்பெனப் பகர்ந்தாள்!

இத்தகு மாண்பினை உடையோர் இராம
கதையினுள் பலரைக் காணலாம் ஆயினும்
தொண்டன் என்று சொல்லும் போதே
அநுமன் தானென் நினைவில் வருகிருன்!
எத்துணைப் பெருமையன்! எத்துணை வலிமையன்!
வெல்லற் கரிய சொல்லின் செல்வன்!
வானள வுயரும் வடிவினன்! வான
மீனின மணிகள் பறிக்கும் முடியினன்!
திசைகள் தடவுந் தோளினன்! திசைதொறும்
விசையுறு பந்தென விரையும் தாளினன்!

கடல் அவ னுக்கொரு கால்வாய்! காணும்
மலைகள் குன்றுகள் மாங்காய்ப் பிஞ்சுகள்!
அரக்கர்கள் அவன்விளை யாடும் பொம்மைகள்!
எரியின் கடவுளை ஏவல் கொண்ட
பதியையே எரிக்கு விருந்து வைத்தவன்!
சிறையி ருந்த செல்விக்குந் தவத்தின்
நிறைஉ வந்த இளைய நம்பிக்கும்
தக்க சமயத்தில் தகவல் தந்தவர்
புக்கிலுள் உயிரைத் தக்க வைத்தவன்.

விதிக்கே விதிசெயும் இளைய பெருமாள்
மாளாத் துயர்தரு மீளாத் துயில்கொள
பச்சிலை மலையைப் பறித்து வந்துயிர்ப்
பிச்சை அளித்த பெருமாள் இவனே!

இத்துணைப் பெருமையன் இத்துணை ஆற்றலான்
இராம என்னும் இரண்டெழுத் தின்முன்
எல்லாம் அடங்கிய எளிய னாகிறான்
ஆவல் ஊக்கிய ஏவலன் ஆகிறான்
நாணாய் நிமிர்பவன் நாணல் ஆகிறான்
துவண்டு தளருந் தொண்ட னாகிறான்
தன்வலி யறியாத் தாச னாகிறான்.

என்ன காரணம்? அவனிடத் திருந்த
தொண்டுளம் காரணம்! தூய்மை காரணம்
அறந்தரு தலைவனை அறிந்த காரணம்
முதலை அறிந்த மூல காரணம்!
இத்தனைக்கும் இருவரும் முன்னர்
அறிமுக மில்லா அயலவர் ஆவர்!

எப்படி இந்நிலை வாய்த்ததோ வென்றால்
தப்பித மில்லாத் தொண்டுளத் தாலே!
உண்மை யான தொண்டுளம் இருந்தால்
எல்லாம் வல்ல இறையே எளிவந்து
தானே நம்மனக் கதவைத் தட்டும்!
அவ்வகை யிற்றான் உலகை அளந்த
இருபே ரடிகள் ஒருகுரக் கினத்தன்
சிறிய திருவடி காணச் சென்றன

இன்றைய நிலையை எண்ணிப் பார்த்தால்தான்
அநுமன் தொண்டின் அருமை விளங்கும்.

பத்துக் கூட்டத்தில் தலையைக் காட்டினால்
நகர மன்றத்து நாற்காலி வேண்டும்

பத்துச் சிற்றூரில் பேசி விட்டால்
சட்ட மன்றத்துப் படியேற வேண்டும்
பத்து நகர்களில் பேசி விட்டாலோ
அமைச்சர் பதவியே அளித்திட வேண்டும்
எதுவுமே இல்லை என்றால் எல்லோரது
கணக்கையும் இவருக்குக் காட்டவேண்டும்.
இதுதான் இன்றைய தொண்டின் மாண்பு
தன்னலப் போர்வையில் வருகின்ற தாம்பு!

நீரிற் கரைத்த சர்க்கரை யாரது
கண்ணிலும் படாதுதன் இருப்பைக் காட்டும்
ஒவ்வொரு துளியிலும் இனிப்பை ஊட்டும்
அதுபோ லத்தான் தொண்டனும் பிறரது
நலத்தில் தன்னைக் கரைத்துக் கொள்வதுன்!

தன்னலக் களிம்பு பற்று தாயின்
தொண்டு சொக்கத் தங்கமாய்ச் சுடரும்
தானெனும் அகந்தையின் ஈனம் ஒழிந்தால்
தொண்டு மலைமிசைச் சுடராய் விளங்கும்
அத்தகு தொண்டுக்கோர் ஆணி
அஞ்சனை பெற்ற அநும மாணியே!

முன்னவன் பின்செல்லும் மூடா விழியானாய்
இன்னொருவன் உள்ளானும்! தொண்டுக் கிளையானாய்!
நீங்கா நிழல்போல நீளத் திரிந்துழன்று
தாங்காத் துயர்பலவுந் தாங்கச் சளைக்கானும்
வில்லெடுத்த கையாலே வேரெடுத்துத் தூறெடுத்துப்
புல்லெடுத்துக் காட்டுக் குடிலைப் புனைவானும்!
அண்ணன் துயில்கொள்ள அங்கையில் வில்லுடனே
கண்ணை இமைக்காமல் கற்றூணாய் நிற்பானும்
இன்னபிற தொண்டுகளால் ஏற்றமிகப் பெற்றவனும்

அன்னவன் என்னிடம் சொன்னதொன்றுண் டென்னவெனில்
நாட்டு வளப்ப நலமெல்லாம் விட்டு விட்டுக்
காட்டுக்கு வந்தபின்தான் தொண்டு செயக் கற்றானும்!

மாளிகையை விட்டு வனம்புக்க பின்னர்தான்
தோளிலே தொண்டு சுமக்கக் கிடைத்ததுவாம்!
ஆதலால் தொண்டுசெய ஆர்வமுள்ள செல்வர்கள்
பாதையை விட்டுநடை பாதைவர வேண்டுமாம்
எட்டடுக்கு வீட்டில் இருப்போர்க் கெருமாட்டுக்

கொட்டகையில் வாழ்வோர் குறைகள் புரியாவாம்!
உப்பரிகை மேலேயே உல்லாசங் காண்பவர்க்கு
கப்பரை ஏந்திகளின் கட்டம் புரியாதாம்!
ஊட்டிக் குளுகுளுப்பின் ஓய்வில் திளைப்பவர்க்கு

நாட்டைச் சுடுங்காய்ச்சல் நாடி தெரியாதாம்,
வானில் பவனிவரும் வண்முகிற்கூட்டத் தால்
ஆன பயனென்ன ஆகாயத் துள்ளவரை
கிட்டும் மழையாகக் கீழறங்கி வந்தால்தான்
பட்ட மரந்தழைக்கப் பாருக்குத் தொண்டுசெயும்.

ஏழையோ டேழையாய் வாழத் தெரிந்தால்தான்
ஏழை சிரிப்பில் இறைவன் தெரிவானும்
என்று நயமாய் இளையான் எடுத்துரைத்துச்
சென்றான் அவனுரையைச் சிந்தையிலே தேக்கியநான்
எவ்வளவோ சொல்ல இருந்தாலும் நேரமின்றி
இவ்வளவில் நிற்கிறேன் இங்கு.

என்றுமுள்ள தமிழுக்குத் தொண்டு செய்தான்
என்றுமுள்ள அறத்திற்குத் தொண்டு செய்தான்

என்றுமுள்ள கவிதைக்குத் தொண்டு செய்தான்
என்றுமுள்ள பரம்பொருட்குத் தொண்டு செய்தான்

என்றுமுள்ள பொருள்களுடன் இவ்வாறாக
இயற்றமிழால் தனைப்பிணைத்துக் கொண்ட கம்பன்

இன்றுமுளான்! நாளையுளான்! இங்கும் அங்கும்
என்றுமுளான்! வாழ்கஅவன் தொண்டின் மாண்பு!



நாள்	14-5-1978
இடம்	புதுவை கம்பன் கலையரங்கம்
தலைமை	கி. வ. ஜகந்நாதன் அவர்கள்
பொருள்	பாட்டரங்கில் கம்பனுக்குப் பாராட்டரங்கம்

இளங்கோவடிகள்

இளங்கோவடிகள்

நாமகள் அச்சக நாதனெ னக்கொள
நன்கு படைப்பவனே!
தேமது ரத்தமிழ் ஓசைசெ ழித்திட
நாடு கடப்பவனே!
பாமது கைக்கொளும் ஆவலில் வந்துள
இந்த அரங்கிலுளோர்
காமுற யானொரு தேன்கவி வார்த்திட
நெஞ்சு கனிந்தருளே!

கம்பனடிப் பொடியே உன்றன்
கால்பட்ட பொடிக ளெல்லாஞ்
செம்பொன்செய் மலர்களா கிச்
திருமுடியாய் உருவம் மாறி
உம்பர்கள் கூடும் இந்த
உயர்அரங் குற்ற தேயோ!
அம்மலர் முடிதான் உன்றன்
அருமுடி சூடி னாயோ!!

பாட்டரங்கப் பெருந்தலைவ! என்றைக் கும்நீ
　　பைந்தமிழ்க்குத் தொண்டன்தான்! சாமி நாதப்
பாட்டனுக்கு மாணவன்நீ! ஆனால் இன்று
　　கலைமகட்கே ஆசிரியன்! பழமைத் தோற்றங்
காட்டிடுமுன் உருவெழுதி! புலமை யில்நீ
　　முதுகுடுமிப் பெருவழுதி! செவ்வேள் தான்நீ
ஏத்துகிற ஒருகடவுள்! ஆனால் இங்கே
　　செவ்வேளின் கையுலுனை ஏத்துஞ் செய்யுள்!

மேனாடு போய்வந்தாய்! அங்கே போய்நீ
　　என்னபொடி போட்டாயோ தெரிய வில்லை
தானாக அவனவனும் மாறு கின்றான்
　　தலைமுடியை உன்முடிபோல் திருத்து கின்றான்
வானாளும் பாவலரோ கோலம் மாற்றி
　　வந்துள்ளார் இவ்வரங்கில் நடிப்பதற்கு!
நானுந்தான் வந்துள்ளேன் நமது நாட்டில்
　　நடித்தால்தா னேபதவி பாராட் டெல்லாம்!

நான்தான் இளங்கோ! நகைக்காமல் கேளுங்கள்!
ஏன்தான்பொய் சொல்கின்றாய் என்றுநினைக் காதீர்!
தவறாகச் சொல்லவில்லை! சற்றெண்ணிப் பாரும்!
சிவனார்தம் பிள்ளைகளில் செவ்வேள் இளங்கோ!
இமய வரம்பன் நெடுஞ்சேர லாதற்கு
அமைந்த இரண்டா மவனும் இளங்கோதான்!
இந்த இருவர்க்கும் இன்னுமோர் ஒற்றுமை
வந்த பழவினையால் வாய்த்த துறவு

பழநி மலையாண்டி பார்த்த துறவு
பழந்துற வலைதொரு பாதித் துறவுதான்!
சேரனதோ முற்றுந் துறந்த முழுத்துறவு!
சேருமிவ் வொற்றுமையைச் சிந்தித்துத் தான்நான்
இளங்கோ வடிகளாய் இங்குற்றேன்! பாட்டுக்
களங்காண வந்துற்றேன் கம்பனைப் பாராட்ட!
பாராட்டுச் சொல்லிப் பழகிய பாவலன்யான்!
சீராட்டிப் பெற்ற சிலம்புக்கு நாயகனைக்
கண்டேத்துஞ் செவ்வேளென் றிசைபோக்கிக் காதலாற்
கொண்டேத்துங் கிழமையான் கோவலன் அவனென்றும்
மண்தேய்த்த புகழனென்றும் மதிமுக மடவார்தம்
பண்தேய்த்த மொழியினர் ஆயத்துப் பாராட்டக்
கற்றுக் கொடுத்த கவிஞன்யான்! இன்னுமது
முற்றுப் பெறவில்லை! மற்றொன்று கேளுங்கள்!
மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
மலையிடைப் பிறவா மணியே என்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ! என்று
முதலிர வன்று புதுமனைவியைப்
பதமாய் எப்படிப் பாராட்டுவ தென்று
தமிழிற் பயிற்றிய சமணத் துறவிநான்
எங்கே அதெல்லாம் தெரிகிற தின்று
இன்றைய நாளில் அதுவெல் லாந்தான்
முன்னு லேயே முடிந்து விடுகிறதே!
என்று லும்நான் எழுதிய நூலைப்
படித்துப் பார்த்தவர் பயன்பெறு கின்றார்!
சமய மறிந்து பாராட்டு கின்ற
கலையில் ஞானம் கைவரப் பெற்றுத்

தலைவராய் உயர்ந்து செல்வராய் வாழ்கிறார்!
கம்ப நாடனும் இப்ப டித்தான்
கால மறிந்து கற்பென் கின்ற
உயர்பண் பதனை உயர்த்திப்பா ராட்டி
உலகிடை உயர்ந்த புலவனாய் நிமிர்ந்தான்!
கம்ப நாடனை யான் பாராட்டக்
காரணம் என்னெனில் வேறொன்று மில்லை!

எந்தக் கொள்கையை யானெடுத் தேனோ
அந்தக் கொள்கையே அவனும் பற்றினான்!
உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தும்
பரிசினை நாட்டநான் படைத்தேன் காப்பியம்
கற்பின் கனலியைக் கடவுள ருந்தொழும்
அற்புதஞ் செய்த தவன்றன் காப்பியம்

எழுநூ றாண்டுகள் எனக்குப் பின்னால்
எழுத வந்ததே ரழுந்தூர்க் காரன்
இலக்கிய உலகில் எனக்கொரு தம்பி!
தம்பி எனினும்இன்று தலைவன் அவன்தான்
தம்பிகள் தாமே தலைவர்க ளின்று!
கம்ப னவன் செய் காப்பியத் துள்ளும்
முன்னால் அரசு தம்பிக்குத் தானே!
பின்னால் தானே இராமனுக் கரசு!
நாட்டு நடைமுறைக் கொப்பவே நானும்
பாட்டுக் கொணர்ந்தேன்பா ராட்டுப் பத்திரமாய்!

எங்கே? அந்தச் சடையன் வளர்த்தவன்
ஆ!இதோ! இங்கே இருக்கிறான் அக்கள்வன்!
கள்வன்நீ கம்பனே கள்வன்நீ கற்றவர்கள்
உள்ளங் களையெல்லாங் கொள்ளை கொளுங் கள்வன்நீ!
என்றன் சிலம்பொலித்த கற்பென்னும் இன்னிசையைக்
கன்னம்வைத் துக்கவர்ந்த கைவண்ணக் கள்வன் நீ!

கற்புக் கனலாலே காம அரக்கெரித்துச்
சிற்பங்கள் வார்த்திட்ட செந்தமிழ்ச்சொற் கொல்லன்நீ!
வாடாக் கவிமலர்க்கு மாற்ருய் விலையில்லாச்
சூடா மணிபெற்ற சொற்கோ வலனே நீ!
எந்த நெருக்கடி வந்தாலுஞ் செந்தமிழ்
மன்றங் களிலேறி மாருமல் ஆள்பவன்நீ!
பாதுகாப் புச்சட்டப் பாசறைக்குள் ளேசென்று
பாதுகா பட்டாபி டேகநீர் வார்ப்பவன்நீ
தாத்தாக்க ளெல்லாந் தலைவணங்க இன்றைக்கோர்
ஆத்தானப் பாவலனுய் ஆளப் பிறந்தவன்நீ!
ஆத்தானப் பாவலனென் ருலும் அடிப்பொடியாய்
மாற்றுருவில் வந்து நடிப்பதற்கும் வல்லவன்நீ!

பாவலனே! இப்பெரிய நாவலந் தீவுமக்கள்
தாவுங் கவிக்குலமாய் ஆவதுபார்! அந்தோ!
எதைத்தான் போற்றுவதென் றேதும் அறியார்!
இதுவருமோ இல்லை அதுவருமோ என்றழுவார்!
மூத்தோர் சொல் வார்த்தைதனை யாரின்று போற்றுகிருர்?
போதும்! துறந்து விட்டுப் போங்களென ஓட்டுகிருர்!
அவ்வாறு நீஇல்லை கம்பனே! மூத்தவன் யான்
எவ்வாறுசொன்னேனே அவ்வாறு போற்றினைநீ
ஞாயிறு போற்றுதும் என்று நான் ஆணையிட்டேன்
ஞாயிறு தன் மரபை நன்ருகப் போற்றி விட்டாய்!

கம்பனே உன்னுடைய காப்பியத்தை நானெடுத்தால்
அம்புவியில் உள்ளபிற அத்தனைக் காப்பியமும்
வெய்யிலில் வைத்த விளக்கொளியாய்ப் போவதுமேன்?
செய்யுள் இயற்றுவதில் தேர்ந்தவனே, நீதான்
இரவி மரபினை ஏத்தியதால் அந்த
இரவி இயல்பை இரவலாய்த் தந்தானே?

உன்கதை ஓர் இரவல் என்றிவ் வுலகோர்கள்
எண்ணிவிடக் கூடாதே என்று நினைத்தவன்
முன்னவன் தந்த முதனூலைக் கூட உன்னூல்
பின்னடையச் செய்துவிடும் பேரொளியைத் தந்தானோ?
செய்யுள் விழா உனக்கின் றென்று தெரிந்துதான்
வெய்யிலை யார்க்கோ இரவல் கொடுத்துள்ளானோ?

கெட்டிகார ன்தான்நீ! கம்பா! நீமிகக்
கெட்டிகா ரன்தான்நீ! கிளத்தினேன் நானொன்றை
கெட்டியாய் நீயதைப் பற்றி விட்டாய் இங்கே
சுட்டுகிறேன் அந்தச் சூக்குமத்தைக் கேள் நீ!
பெரியவனை மாயவனைப் பேருலகம் ஏத்தும்
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணென்று
சூத்திரம் நான் சொன்னேன்! விருத்தியுரை நீ செய்தாய்

பாத்திரமாய் அந்தப் பரம்பொருளை தன்னுருவை
எல்லாருங் காண எழுதி முடித்துவிட்டுக்
கல்வியி லேபெரியன் கம்பனென ஆனாய்!
பெரியவனைப் பாடிப் பெரியவனாய் ஆனாய்
தெரியாதா உன்னுடைய திட்டமெல்லாம் இங்கெனக்கு,
உம்பரெலாம் போற்றும் ஒருவனைப் போற்றவந்த
கம்பனே நீயொரு காரிய வாதியென்பேன்!
சக்கர வர்த்தித் திருமகனைப் பாடியே
சக்கர வர்த்தியென ஆயினை நீகவிச்
சக்கர வர்த்தியென ஆயினை இக்காலச்
சக்கரம் உன்றனக்குச் சாதகமாய்ச் சுற்றுதப்பா!
கன்னித் தமிழுக்குக் கதிநீயென் றிங்கேதான்
சொன்னார் கவிஞனே! இன்னுமிவர் உன்பெயர்மேல்
குத்துகின்ற முத்திரைகள் எத்தனையோ யானறியேன்?
எத்தனைப் பட்டங்கள் அப்பாஇந் நாட்டில்?
பதவியே இல்லாமல் பட்டங்கள் பெற்றாய்?


பதவியென ஒன்றிருந்தால் பட்டங்கள் நூறு
புதிது புதிதாகத் தேடிவரும் நாட்டில்
பதவியே இல்லாமல் பட்டங்கள் பெற்றவன் நீ!
ஆற்றுவரி கானல்வரி அன்ன வரியெல்லாந்
தோற்றியெந் தாய்க்குச் சிலம்பை அணிவித்தேன்
ஆடகச் செஞ்சிலம்பின் அவ்வரிக ளேக்கண்டு
பாடவந் தார்கள் பலபேர் எனக்குப் பின்!
தீட்டி வரி வரியாய்த் தேடியவர் நீட்டிய
ஏட்டு வரியெல்லாம் எங்கே? கரையான்கள்
கோதும் வரியாய்க் குறைபட்டுப் போயினவோ!
கோதா வரியன்ரே கோமகனே நின் பாட்டு!
பத்தினித் தெய்வப் பரல்ஒன்றே என் சிலம்பில்
எத்தனைத் தெய்வ மணிகளப்பா உன் அணியில்
இந்த உலகைத் திருத்த ஒரு தெய்வம்
வந்தால் முடியாதே என்ற மனக்கருத்தோ
அந்தரத்தே நின்ற அனைத்துத்தெய் வங்களையும்
சுந்தர மாய்க்கொணர்ந்த சொல்லின் செல்வன் நீதான்
மானுடத்தைத் தெய்வமாக்கி வானகத்துக் கேற்றினன்யான்!
வானின்று தெய்வத்தை மண்ணுக் கிறக்கினை நீ!
இன்னும் பலவாய் இயம்பிநினைப் பாராட்ட
எண்ணந்தான் ஆனல் நான் என்னசெய்ய? இப்போது
மற்றவர்கள் என்னையொரு மாதிரியாய்ப் பார்க்கின்ருர்
உற்ற தலைவருந் தாம் பார்ப்பார்! எனவே!
முடிவாக ஒன்றை மொழிந்தபின்னர் என்றன்
வடிவத்தை முன்போல் மறைத்துக்கொள்கின்றேன்!
ஒருவற் கொருத்தியெனும் உண்மைநிலை வாழ
இருவருஞ் செய்தோம் இயற்றமிழ்க் காப்பியம்!

வீட்டிலே பாராட்ட வேண்டியதை விட்டுவிட்டுக்
காட்டிலே மேயவந்த காவலனுங் கோவலனும்
சீர்கெட்டுப் போன திறத்தைத் தெரிவித்திப்
பார் கெட்டுப் போகாமல் பண்போடு வாழத்தான்
கற்புக் கடைவிரித்தோம்! அக்கடையில் இப்போது
விற்பனை எப்படி என்று விளம்பவா?

கண்ணகியா சீதையா கற்பில் சிறந்தவளென்
றெண்ணரும் பட்டி மன்றம் எங்கணும் ஆயினும்
மேடையில்தான் இத்தகைய மேலான எண்ணங்கள்
காடைகட்கோ ஊரெல்லாங் கண்ணடிக்கும் வண்ணங்கள்!!
ஆடையற்ற நாட்டியங்கள்! அன்றன்று காமத் தீ
வாடை சுமந்துவரும் வார இதழ்க் கதைகள்!
இத்தனைப் போருக் கிடையிலுங் கம்பா நம்
பத்தினிக் கோட்டம் பலமாக நிற்கிறது!
தெம்போடு சொல்லுகிறேன்! தென் பாண்டிச் சீமையிலே

பண்பாட்டுக் கின்னும் பழுதுவர வில்லை
உரத்த குரலில்நான் இன்னென்றுஞ் சொல்வேன்
பரத்தைமையை நீக்கி விட்டார் பாண்டி விடுதிகளில்
காலத்தால் நம்கொள்கை காண்கிறது வெற்றியென
சாலத்தான் சொல்வதற்குச் சான்றிது தந்தேன்!
சடையப்பன் தன்னைத் தமிழ்நிலம்பா ராட்டக்
கடையன்று நீ வைத்தாய்! நின்னைப்பா ராட்டுங்
கடையொன்று நான்வைத்தேன்! கம்பா இனி நான்
விடைபெற்றுச் செல்வேன் விரைந்து.

வில்



நாள்	12 - 8 - 1978
இடம்	சென்னைக் கம்பன் விழா
தலைமை	'துறைவன்' அவர்கள்
பொருள்	இவை சொல்லும் இராமாயணம்

வில்

வில்

அழகு தமிழ்மங்கை ஆடை திருத்தி
எழுதுகின்ற கோலங்கள் எத்தனை எத்தனையோ
அத்தனையுஞ் சங்கமம் ஆகுந் துறைமுகத்துக்
கத்து கடல் கூவக் கவிதை வளர்க்குநகர்.
அன்றன்று புத்தம் புதிய இதழ்விரிக்கும்
பொன்ரு இலக்கியப் பூங்கா விளங்குநகர்

வானத்தை வில்லாய் வளைத்திடுவோம் வான்மழையைத்
தேன்சொட்ட வேபெய்யச் செய்திடுவோம் என்றெல்லாம்
காதிலே தேன்பாய்ச்சுங் கட்சி அரசியல்
வாதிகளுக் குத்தலைமைப் பீடங்கள் வைத்தநகர்.
மன்னுதி மன்னர்கள் வந்த பகைவென்று
வில்லாதி வில்லரெனக் கோட்டையிலே வீற்றிருந்து
மொத்தத் தமிழர் தலையெழுத்தை யேமாற்றுஞ்

சத்தி படைத்த தமிழர் தலைநகரம்
இன்னபல மாண்புகள் எல்லாம் நிறைந்துள்ள
சென்னை நகரத்துச் செல்வப் பெருமக்காள்!
ஆய கலைமகளால் அச்சாமி நாதனருள்
ஏயக் கிடைத்ததனுல் ஏற்றத்தைப் பெற்றவர்காள்

நீதித் தலைவர்காள்! நேயமுறக் கம்பனை
ஓதி மகிழும் உமறுகளின் வாரிசுகாள்!
மும்மடங் காகப் பொலிந்த முகத்தினராய்
எம்மருங்குஞ் சூழ இருக்கும் பெரியோரே!
நேரத்தில் வாராத நீர்மையினுர் அங்கங்கே
ஓரத்தில் நின்றவணம் உற்றுக்கேட் கின்ருேரே!
நேரத்தில் வந்துதவும் நேர்மையினுல் இத்தலைமைப்
பாரத்தை ஏற்றுள்ள பாட்டரங்க நற்றலைவ!
வில்லுப்பாட் டொன்றுக்கு வந்ததுபோல் மேடையிலே
வில்லை வளைத்ததுபோல் வீற்றிருக்கும் பாவலர்காள்!
வில்லே ருழவாய் விதைக்கும் எனக்குப்பின்
சொல்லே ருழவுசெயச் சூழ்ந்திருக்கும் நாவலர்காள்!
எல்லா ரையுமிந்தச் செவ்வேள் இருகையால்
வில்லாய் வளைகின்ற மெய்யாய் வணங்குகிறேன்.

சின்னுளாய்த் தென்பாண்டிச் சேரியான் என்றனக்குச்
சென்னை நகரத்துக் கம்பன் திருவிழாக்
கோயிற் பிரசாதங் கொஞ்சங் கிடைக்குமா?
வாயமுது கொள்ளவங்கு வாயில் திறக்குமா?
என்றெலாம் ஆவலுற எண்ணம் எழுந்ததுண்(டு)
இன்றுதான் அவ்வெண்ணம் ஈடேறக் கண்டேன்
அடியேனும் உள்ளே அடியெடுத்து வைக்க
அடையாள மாயொரு வில்லைக் கொடுத்தார்கள்!
பந்திக்கு முந்தென்ற பண்டையோர் சொற்படி
முந்தியே வந்து முதலிடத்தைப் பற்றிவிட்டேன்.
செவ்வேளுக் கெங்கேயும் வேல்தான் தருவார்கள்
இவ்வூரில் என்னவோ வில்லைக் கொடுத்தார்கள்
காலத்தின் மாறுதல் கண்டுதான், பேராலே
வேலன்நான் என்ருலும் வில்லனுய் வந்துள்ளேன்.
நல்ல பெயரெடுத்து நாட்டின் அரங்குகளில்
வில்லன்கள் தாமின்று வெற்றிநடை போடுகிருர்.

ஆதலால் கையில் அகப்பட்ட வில்லது
போதும் எனநான் புறப்பட்டு வந்துவிட்டேன்.
வில்லென்ருல் போர்தானே என்று வெறுப்பீரோ
இல்லையதிற் கொஞ்சம் விருப்பமும் வைப்பீரோ
போர்க்கருவி என்கின்ற போதிலும் வில்லின்மேல்
பார்க்குள் பலர்க்கு விருப்பம் இருப்பதுண்டு
வில்லாய் வளையுங் கிழவர்க்கும் மைதீட்டும்
மெல்லியலார் தம்புருவ வில்லில் விருப்பிருக்கும்
அன்றைக்கு வஞ்சியிலே ஆண்ட தமிழன்னை
சென்னி மிசைப்பொறித்த சின்னமிவ் வில்லன்ருே!
இன்றைக்குத் தானேஇச் சென்னையிலே வீற்றிருந்து
என்னென்ன வெல்லாமோ சின்னங்க ளாய்க்கொண்டாள்.
அன்ன திருக்கட்டும்! அந்த இயற்கையெனும்
அன்னைக்கே வில்லின்பால் ஆழ்ந்த விருப்புண்டே!
ஆகையினுல் தானே அடிக்கடி வானத்தில்
மேகத்தி னூடவள் வில்லெழுதிக் காட்டுகிருள்.
இப்படி யெல்லாம் இருக்கையில் வில்லதனை
எப்படி நீவிர் விரும்பா திருப்பீர்!
அதிலும்நீர் தேர்ந்தெடுத்த தாருடைவில்? அந்த
முதல்வனே கைக்கொண்ட மொய்ம்புடைய வில்லன்ருே!
நல்லறத்தைப் பாரிலெந் நாளும் நிலைநிறுத்த
வல்லரக்கர் வாழ்வை வடித்திட்ட வில்லன்ருே!

இத்தகு வில்லை இக்கவி யரங்கில்
முதலில் வைத்த தெதனைக் கருதியோ?
அணிபெறுங் கவிதை அணிவகுப் புக்கு
முற்பட விற்கொடி ஏற்றினர் கொல்லோ?
பாமழை பொழியப் போவதன் குறியாய்க்
காமரு வில்லைக் காணவைத் தாரோ?
என்னவோ அறியேன் எனினுமொன் றுரைப்பேன்
கம்பனே தனது காப்பி யத்தை
வில்லம் பைத்தான் சொல்லித் தொடங்கினன்
தெய்வ மாக்கவி செய்தசொற் கோயிலில்
கடவுள் வாழ்த்தெனும் பந்தலை யிட்டான்
அவைய டக்கமாந் தோரணங் கட்டினன்
வில்லம் பைநுழை வாயி லாக்கினன்
சொல்லுமின் றேனேஅவ் வாயிற் செய்யுளை!

''ஆசலம்புரி ஐம்பொறி வாளியும்
காச லம்பு முலையவர் கண்ணெனும்
பூசலம்பு நெறியின் புறஞ்செலாக்
கோச லம்புனை ஆற்றணி கூறுவாம்!

இத்தகு வாயிலி னுள்ளே நுழைந்தால்
எத்தனை யோபல வில்லைக் காணலாம்
விதிக்கு விதிசெய வில்லொன் றங்கே
கொதிப்ப டைந்து குதிப்பது காணலாம்

கங்குல் எல்லை காணு மளவும்
இமைப்பில னாகி நின்ற இளவற்(கு)
ஊன்று கோ லாக உதவுதல் காணலாம்
காடு வைகிய கற்பின் கனலை
பீடை எதுவும் அண்டா திருக்கக்
கோடு போட்டுக் கொடுத்தது காணலாம்
தாக்கணங் கன்ன தாவும் அரக்கர்தம்
மூக்கரி கின்ற முறைமையைக் காணலாம்
இப்படிப் பற்பல காணலாம் ஆயினும்

காணு தனவெலாங் காண வைப்ப(து)
ஒப்பிலா அந்த ஒருவனின் வில்லே!
எவனவன்? அவன்ருன் உயர்நலம் உடையவன்
அவன்ருன் மயர்வறு மதிநலம் உடையவன்

அவன்ருன்,
உருவில் திருவில் உயர்வில் உணர்வில்
அறிவில் செறிவில் வடிவில் தகவில்
பணிவில் பரிவில் துணிவில் கனிவில்
செருவில் உறவில் நிறைவில் முடிவில்
இவ்வளவி லுஞ்சிறந்த இராம னென்னும்
வல்வில் வீரன் வளைத்த வில்லே! அவ்
வில்லின் கணைகள் விளைத்த நாடகம்
எண்ணென்று சொல்வேன்! என்னென்று சொல்வேன்!

மார்பில் நுழைந்து முதுகின் வழிபோய்ப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனத்
தாடக நாடகம் ஆடிய தொருகணை!

மாய மானை மாயத் துரத்தி
மாய மாக மறைந்த தொருகணை!

மராம ரங்கள் ஏழையுந் துளைத்தே
இராம ஆற்றல் எழுதிய தொருகணை!
பக்குவம் அடைந்த பக்தர்கள் காண
முதற்பொருள் முன்னே வெளிப்படு.மாபோல்
மூல மந்திரப் பொருளைத் தோற்றி
வாலிக்கு வீடு வழங்கிய தொருகணை!

அடல்சேர் இலங்கை வேந்தன் உடலுள்
சீதை யின்மேல் வைத்த காதல்
கரந்து மறைந்த இடமெது வென்றே
ஓடி ஓடித் தேடிய தொருகணை!

அறத்தின் நாயகன் இவ்வகை அம்பெலாம்
விடுத்தது பிறர்தம் நலத்துக் காக!

முனிவன் வேள்வியைக் காக்க காதல்
மனைவியின் ஆவல் தீர்க்க அன்பு
நண்பனின் பழியைப் போக்க வாழ்க்கைத்
துணைவியை வெஞ்சிறை மீட்க! இவ்வணம்
பிறர்நலத் துக்காய் வில்லை எடுத்தவன்
தனதொரு நலத்துக் கெடுத்த தில்லையோ?

ஆம்! ஒருமுறை எடுத்தான் அம்முறை எடுத்தது
அவனுடை வில்லன்று சிவனுடை வில்லது
பார்முக மாகப் பன்னாட் கிடந்த
கார்முகந் தன்னைக் கையி லெடுத்தான்
எடுத்தது கணையைத் தொடுக்க வன்று
ஒடிக்க எடுத்தான் மணமு டிக்க எடுந்தான்
பிறர்நலத் துக்குப் படைக்கலந் தேடு
உன்னல மென்றால் உடைத்துப் போடு!
இதுதான் இராமா யணஞ்சொல் லுவதோ!
அமைதிக்கு அணுவின் ஆற்றலைத் தேடு
சண்டைக் கென்றால் சகதியிற் போடு
பாரதம் இதைத்தான் பகரு கின்றதோ
இதுமட்டு மில்லை! இன்னொன்று முண்டு!

ஒருசொல் ஒருவில் ஒரில் என்று
வரைமுறை வடித்து வாழ்ந்தவன் வழியைப்
பற்றுக வென்றும் பகரு கின்றது
ஒருசொல் என்றால் என்ன என்கிறீர்!
இன்றைக் குள்ள ஒருசொல் போலவா
உளத்தில் ஒருசொல் உதட்டில் ஒருசொல்
அறையில் ஒருசொல் அரங்கில் ஒருசொல்
முன்னே ஒருசொல்! வென்று வந்த
பின்னே ஒருசெல் என்பதா இல்லை!

அகமும் புறமும் ஒருமை பேணிக்
கடைசி வரையிற் காக்கும் ஒருசொல்!
சொல் இவ்வாறு! வில்எவ் வாறெனில்
ஒற்றைக் கணையில் இலக்கு முற்றும்
ஒருகணை தொடுத்தால் மறுகணை வேண்டா
இற்றைநாள் போர்க்கணை போல வன்று!

சாகும் வரையில் உண்ணு விரதமாம்
மாதந் தோறும் தேதி வாரியாய்!
சொல்லைச் சொன்னேன்! வில்லைச் சொன்னேன்
இல்லைப் பற்றிச் சொல்ல வேண்டா
ஒன்று போதும் என்று சொன்னுல்
இன்று யாரதைக் கேட்பார் என்கிறீர்!

ஒற்றை என்ருல் யார்கேட் கின்ருர்
இரட்டை தானே வேண்டு மென்கிருர்!
இதனை விரிக்கில் நீங்கள் வேறே
எதையோ எண்ணுவ தாக முடியும்!

எனவே,
முடிவாய் ஒன்றைச் சொல்லி முடிக்கிறேன்
வல்வில் ஓரி வில்விச யன்முதல்
பற்பல வீரர் வில்லைப் பற்றினர்
ஆயினும் என்ன? ஆயிரம் இருப்பினும்
வணங்கு தற்கும் வாழ்த்து தற்கும்
உரிய தந்த ஒருவன் வில்லே
அண்டம் போற்றுவ தக்கோ தண்டமே!

எத்துணைப் பேரோ இன்றைய நாளில்
சத்தியாக் கிரகஞ் செய்கின்ருர்கள்
சத்தியஞ் சிறிதும் இருக்குமா அதிலே?
சத்தியாக் கிரகத்தின் பகைமைதான் இருக்கும்!

அதனாலேதான் உலகம் அதனை
வேடிக்கை பார்த்து விட்டுவிடு கின்றது
மார்ந்தருக் குள்ளொரு தெய்வ மாகச்
சத்திய சோதனை செய்தோன் தந்த
சத்தியாக் கிரகம் என்ப தனையோ
இத்தரை என்றும் போற்று கின்றது
அதுபோல்,
அறந்தலை நிறுத்த அரக்கர் மடிய
வாய்மை பேணிய நாயகன் வில்லைக்
கோயிலில் வைத்துக் கும்பிடு கின்றது
இதுதான் இராமா யணமென் னுமது
சொல்லும் வில்லெனச் சொல்லி முடிக்கிறேன்.
கம்பன் கழகத் தன்புடை யோரே
அவன்புகழ் பாடுங் கவிதை மேடையில்
'வில்'என் றெனக்குப் பொருளைத் தந்தீர்!
என்றால் இயன்ற அளவுக்கு விற்றேன்
இனிநான் கடையைக் கட்டிக் கொள்கிறேன்
வருகிறேன் வணக்கம்! வாய்ப்புக்கு நன்றி!



ஒன்பது



நாள்	12 - 8 - 1979
இடம்	சென்னைக் கம்பன் விழா
தலைமை	கவிஞர் எஸ். அப்துல் ரகுமான்
பொருள்	எட்டுறவான எழிற் கம்பன்

கம்பன் என் காதலன்

கம்பன் என் காவலன்

கம்பனே! என்னுயிர்க் காவலனே! பாவளத்தால்
அம்புவியைக் காத்தர சாளும் புரவலனே!
செந்தமிழ்த் தேனூறு பாயுந் திசையெல்லாம்
சந்தக் கவிதைமணஞ் சாரும் புலமெல்லாம்
செங்கோல் செலுத்திவருஞ் சீர்த்திமிகு தென்னவனே!
மங்காப் புகழ்கொண்ட மன்னர்க்கு மன்னவனே!
காரைக் குடியிலே கண்டெடுத்து நட்டவிதை
வேரைப் பரப்பி விழுதுகளுந் தாம்பரப்பி,
பாரை அளக்கும் படியாய் வளர்ந்துன்றன்
பேரைப் பரப்பும் பெருமைகளைப் பார்த்தாயா!
வற்றாச் சிதம்பர நாத மணியிசையாய்க்
குற்றாலச் சாரற் குளிரருவி வாழ்த்திசைக்க
தூங்கு மலையருவி தோற்று மதுரஇசை
ஓங்கு மலைநாட்டில் எல்லாம் எதிரொலிக்க,
சென்னையிலே உன்பெயர் தாங்குமணி மண்டபத்தை
இன்னுஞ்சின் னாளில் எழுப்ப இருப்பவனே
தென்புதுவை ஆண்டுவருஞ் சிற்றரசும் ஆண்டுதோறும்
அன்புடனே வந்துன் அடியில் திறைசெலுத்தப்
பண்புடைய கோபிசெட்டிப் பாளையக் காரரெல்லாம்
கண்டுகொண் டுன்றனக்குக் கப்பங்கள் கட்டிவரப்

பக்கத்தில் உள்ளகள்ளிப் பட்டியா ரெல்லாரும்
எக்களிப் போடே இறைவரிகள் தாஞ்செலுத்த
நாமக்கல் வாணருமுன் நாமத்தைப் போற்றியநற்
பாமெத்தை இட்டுப் பரிசில்கள் கொண்டுதர
வாஞ்சை யுடன்சென்ற வாண்டு முதற்கொண்டு
காஞ்சிப் பெரியவர்கள் காணிக்கை கொண்டுதர
எங்கெங்கும் உன்னிசையாய் எங்கெங்கும் உன்பெயராய்க்
கங்கையாய்க் காவிரியாய்க் காணத் தகுங்கவிச்
சக்கர வரத்தியாய்த் தண்டமிழ் நாடெல்லாந்
திக்கு விசயங்கள் செய்துவரும் பேரரசே!
இல்லார் உடையார் எனும்வேறு பாடின்றி
எல்லாரும் இங்கே இனிதே இணைந்திருக்கக்
கோப்புக் கடலிற் குளிக்கும் அமைச்சரெலாங்
காப்புச்செய் யுள்போல் முதல்வராய்க் கண்டுசெல்லக்
காதலொடு நீசெய்யுங் காவல் துறையழகை
நீதித் துறைமுழுதும் நேர்வந்து காண
வெகுமானம் வேண்டி வெகுபேர்கள் இங்கே
ரகுமானைப் பின்தொடர்ந்த தம்பியராய்ப் பாட
மகராச ரெல்லாம் மனமுவந்து கேட்கத்
தகவான சொல்லின்பந் தந்து மகிழ்பெருகி
வாசக நாத வசஞான சம்பந்த
நேச மிகுவிக்க நேர்ந்துன் அடிப்பொடியாய்
எச்சமயத் தோரும் இறைவன் உனைப்பணிய
இச்சமய மேசமயம் என்று மிகப்பெருங்
கூட்டத்த ராயொன்று கூடத் திருமணக்
கோட்டத்தி லின்று கொலுவிருக்குங் கொற்றவனே!
காவலனே! உன்னுடைய காவல் துறையிலொரு
சேவகன் யானுன்னைச் சேவிக்க வந்துள்ளேன்!

என்ன கொணர்ந்துள்ளாய் என்ருல்நான் என்சொல்வேன்
பொன்னும் மணியும் பொருளுந் தரவறியேன்!
நாவாயின் வேட்டுவன் நாயகன் உண்ண எல்லே
மேவாத அன்போடு மீன்கொண்டு வந்தாற்போல்
வீடுபெற நின்ற விருத்தச் சவரியவள்
காடுதரக் கண்ட கனிகொண்டு வந்தாற்போல்
ஏழைக் குசேலர்தாம் எம்பெருமா ஞர்க்கன்று
கூழை அவல்சிறிது கொண்டுவந் தாற்போல
வாரிக் கொடுக்கின்ற வள்ளலுனக் கிப்புதுச்
சேரிக் கவிஞன் சிலசொற்கள்தாங் கொணர்ந்தேன்
தென்சொல்லின் எல்லேயது தேர்ந்த திருமகனே!
என்சொல்லுங் கேட்பாய் இசைந்து!

அன்னேயாய் அப்பனுய் ஆசானும் ஆகிய
கம்பனே! உன்னேயான் ஒன்று கேட்கிறேன்!
பாவல ஞகிய பண்டைநாள் தொட்டே
காவல ஞகுங் கருத்துனக் கிருந்ததோ!
பதவி அதனேப் பெறவே பாவலேக்
கண்ணி விரித்துக் காத்திருந் தாயோ!
ஏனிது கேட்கிறேன் என்ருல் சொல்கிறேன்!

உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலேபெறுத்தலும் நீக்கலும் என்று
முத்தொழில் பற்றி முந்தி உரைத்த நீ
எத்தொழிற் கடவுளேப் பாட எடுத்தனே!
ஆக்குங் கடவுளேப் பற்றியா பாடினே!
நீக்குங் கடவுளேப் பற்றியா நிகழ்த்தினே!
காக்குங் கடவுளின் காதையை யன்ருே
பாக்கடல் கடைந்தாற் போலப் பாடினே!

காத்தற் கடவுளின் காதையைத் தேர்ந்தது
காவல ஞகும் ஆவலில் தானே!
அழிக்குங் கடவுளைப் பற்றி அன்று
தக்க யாகப் பரணி பாடிய
ஒட்டக் கூத்தனுஞ் சக்கர வர்த்திதான்!
ஆயின் உன்போல் ஆக முடிந்ததா!
கல்வியிற் பெரியனும் பட்டங் கிடைத்ததா?
திட்ட மிட்டுப் பதவியைத் தட்டிய
கம்பனே! நீமிகக் கெட்டிக் காரன்!
உயிரெலாம் உறைவதோர் உடம்பாய் நல்லதப்
பயிர்செயும் ஒருபெரும் பண்ணைக் காரன்!
கவியெனக் கிடந்தகோ தாவரி பாய்ச்சிச்
செவிநுகர் கனிதருந் தோட்டக் காரன்!
வையக மெல்லாம் வறிஞ ஞேம்புமோர்
செய்யெனக் காக்குங் காவல் காரன்!

எவர்க்குமே கிடைக்காத பெரும்பதவி நீபெற்ருய்!
கவிக்கரசர்க் கரசனெனக் கவின்முடிசூட் டப்பெற்ருய்!
புவிக்குள்ளே அன்றுநீ பூண்டமுடி யாராலுங்
கவிழ்க்க முடியாத முடியன்ரே காவலனே!
வாட்டமிலா உன்ஞட்சி வலுவினையான் என்சொல்வேன்
கூட்டணியால் அமைகின்ற கூத்தாட்டுப் போலன்றி
பாட்டணியால் நீதனியே படைத்திட்ட நல்லாட்சி
ஆட்டங் கொடுக்காத ஆட்சியன்ரே காவலனே!

வாக்குகளை இந்நாளில் அள்ளியள்ளி வழங்கிடுவார்
பாக்குக்கொ டுத்துப்பின் வெற்றிலையுந் தான்கொடுத்து
வாய்க்குள்ளே போடுதற்குச் சுண்ணங்கொ டாதவர்போல்
வாக்குகளை நிறைவேற்றும் வழிமட்டுஞ் செயமாட்டார்!

வாக்குறுதி நீதருவாய்! நிறைவேற்றும் வழியறிவாய்!
வாக்குகளை நிறைவேற்ற வழித்தடைகள் ஏற்பட்டால்
யாக்கையை விடுத்தேனும் வாய்மையொடு மரபினையுங்
காக்கத்தான் நீயறிவாய்! கலைப்பதற்கு நீதுணியாய்!

பிறப்பாலே தாழ்வுயர்வு பேணாத பெரியோன்நீ!
நிறப்பாகு பாடுகளை நினையாத நெறியோன்நீ!
குறிப்பாக வேடனையுங் குரக்கனையும் அரக்கனையும்
சிறப்பாக ஒருசேர அரவணைத்த செம்மல்நீ!

சதவிகித வருமானச் சட்டங்கள் இன்றியே
பதவிகளை அவர்கட்குப் பரிந்தளித்த வள்ளல்நீ!
உதவியென வந்தவரை ஒருபோதும் உதறாய்நீ!
அதனால்தான் தமிழுன்னைக் கதியென்றே அடைந்ததுவோ!

காவல!
உன் காப்பியம்
வையத்தார் வாழ
நீ வைத்ததோர் அங்காடி
பாட்டுறவு கொண்டு திறந்த
கூட்டுறவுச் சிறப்பங்காடி!
கேட்டவர்க்குக் கேட்டன
எல்லாந் தருங்
காமதேனு வாய்க்
கற்பகமாய்ச்
சிந்தாமணியாய்
வேட்டோர்க்கு வேட்டன
எல்லாந் தரும்
விலையில்லா அங்காடி

இன்றையை அங்காடிகளில்
விலைகளைக் கேட்டாலே
பயமாய் இருக்கிறது!
உன்னுடைய அங்காடியிலே
எதைக் கேட்டாலும்
நயமாய் இருக்கிறது!
சொல்லும் நயமாய்
சொல்லப் படும்பொருள்கள்
எல்லாம் நயமாய்
இருப்பதொரு புதுமையன்று!
சொன்ன பொருளையே
மீண்டும் சொலச் சொல்ல
இன்னும் நயமாய்
இருக்கிறதே அது புதுமை!

பாவலனே! சட்டம் ஒழுங்கைப் பராமரித்தல்
காவல் துறையின் கடனென்பர் – காவலனே
கற்பை அறத்தினைக் காப்பதே காவலுக்கு
முற்படநீ வைத்த முறை!

காவற் சனகனுர் கண்டெடுத்த காரிகையைக்
கோவிய லார்தருமங் கொள்கலத்தைக் - காவலனே
கற்பின் அறத்தின் கனிந்த திருவுருவாய்
நிற்கவைத் தாய் நீ நிலத்து!

மண்ணிற் பிறந்தார்க்கு வைத்த பெருங் காவலென
எண்ணிநீ வைத்த இருபொருள்கள் - அண்ணலே
கற்பும் அறமுமாம் மற்றவற்றின் காவலுக்கு
நிற்கினருய் நீயே நிலத்து!

தலையாய கற்பென்னுங் கொடியை இம் மண்ணிலே
　　தமிழோடு நட்டுவைத் தாய்!
　தடையேதும் இன்றியஃ தடையாற்றின் ஆல்போல்
　　தழைக்கவுங் காவலுற் ருய்!

கலிகால மேற்றிசைக் காளான்கள் அக்கொடிக்
　　காலில் முளைக்குமென் ருே
　கற்பனைப் புற்றீசல் காகிதப் பூச்சிகள்
　　கடித்துச் சிதைக்குமென் ருே

　விலை மாதர் செய்கையுங் கலையாகி இன்றதன்
　　வேரைப் பறிக்குமென் ருே
　விளைவுகள் இவற்றினின் றக்கொடியை இரவு பகல்
　　இமையாது காப்பதற் கோ

　அலையாடு சென்னையின் கடலோரச் சாலையில்
　　சிலையாக வந்துநின் ருய்!
　அறிவான எட்டுவகை உறவான கம்பனே
　　அரியா சனத் தலைவ னே!

உத்தமக் கற்பென்னுங் கொடிபடர அறமென்னும்
ஒரு கம்பம் நட்டுவைத் தாய்!
ஊற்றமுறு மேற்றிசைக் காற்றிலஃ தாடாமல்
உறுதியாய் நிற்கவைத் தாய்!

நித்திரையில் அழகனும் அவளுமன் றிருக்கையில்
நெடுவில்லை ஊன்றியவ னாய்
நீள்விழி இமைப்பிலன் கங்குல்தன் எல்லையைக்
காண்பளவு நின்றவன் போல்

ஒத்துரிமை யோடதைக் காவலுங் காத்தனை!
ஊழிதோ றூழியந் த
ஒரு கம்பம் அசையா திருக்கவோ இன்று நீ
பலகம்பன் கழகம்நட்ட னாய்!


முத்திலா இப்பிகள் சென்னைக் கடற்கரையை
முத்திட் டொதுங்கா வணம்
முறைகண்ட ஒருகாவல் துறைகண்ட கம்பனே!
முடிகண்ட வான்புலவ னே!


பள்ளியுட் சென்றநாள் முதலாக என்னையுன்
பாடலுக் காட்படுத் திப்
பழுதாக யானென்றும் எழுதாத வண்ணமாய்ப்
பணிகொண்ட காவலன் நீ!


தெள்ளிய எழுத்தசை தெரியாது நிற்கையில்
சிறுவனென் தொடைகிள்ளி யே
சீராக அடிதந்து தளையிட்டு மற்றெனைத்
திருத்திய காவலன் நீ!

கள்ளத் தனங்களென் உள்ளத்தி னைக்கண்டு
கண்ணடிக் கும்போதெ லாம்
கண்ணிற் படாமலென் எண்ணத் திருந்தபடி
கவனிக்குங் காவலன் நீ!

வள்ளுவர் கோட்டமொடு கந்தகோட் டம்பொலிய
வளமோங்கு சென்னைநக ரில்
வான்கவிக் கொம்பூன்றி வளர்கவிக் கொடியேற்றி
மலர்தர வருங்கம்ப னே!







நாள் — 13-5-1979

இடம் — புதுவைக் கம்பன் விழா

தலைமை — கவிஞர் வாலி

பொருள் — படைத்த கம்பனைப் பாத்திரங்கள் பாராட்டுகின்றன

அனுமன்

அனுமன்

கவியினத்துக் கொருதலைவா! கலியு கத்துக்
கண்ணனையும் ஆட்டுவித்த பாட்டு மன்னு!

தவருக எண்ணுதே, முன்னுல் வந்து
தலை வணக்கம் நான் செலுத்த வில்லை என்றே!

எவருன்முன் வரினுமவர் வலியிற் பாதி
எடுத்துக்கொள் வாயன்றே! அதனு லேதான்

அவையோரைப் பார்த்தபடி வணங்கு கின்றேன்!
அவமதிப்புச் செய்தேனென் றெண்ணி டாதே!

பத்திரங்கள் சரிபார்க்கும் பதிவா ளன்யான்!
பாட்டரங்கம் அமைத்தோர்கள் என்னைப் பார்த்துப்

பத்திரமொன் றெழுதிவரச் சொன்னுர். அஃதும்
பாராட்டாய் வேண்டுமென்ருர். சரிதான் என்று

பத்திரமாய்க் கொணர்ந்துள்ளேன். அனுமன் பேரால்
பதிவுசெயப் பட்டதொன்றை. கம்ப னுக்கும்

பத்திரங்கள் பலதூவி அருச்ச னைகள்
பண்ணுவது போலதனைப் படிப்பேன் இங்கே!

ஆயிரத்துத் தொளாயிரத் தெழுபத் தொன்பான்
ஆண்டதனில் மேத்திங்கள் பதின்மூன் ரும்நாள்

பாயுமொரு வானரமா மரபில் வந்தேன்
கிட்கிந்தை வனவாசி; மனைவி யில்லேன்.
வாயுவுக்கோர் அஞ்சனையின் வயிற்றில் வந்தேன்
மாருதியென் றழைக்கின்ற அனுமன் என்பேன்!

நேயமுறக் கம்பனுக்கு வரைந்த ளித்த
நீட்டோலைப் பாராட்டி தறிஞர் காண்க!

கம்பனே! ஈதெனது பாராட்(டு)! இஃதென்ன
வம்பென்று சொல்வாயோ! வாஸ்தவந்தான்! இந்நாளில்
பாராட்டக் கூடப் பயமாக உள்ளதப்பா!
பாராட்டுச் சொன்னால், 'சரிதான்' எதற்கோ
அடிபோடு கின்றான் என உள்ளுக் குள்ளே
முடிபோட்டுக் கொண்டு முணுமுணுக்குங் காலமிது!
என்றாலுங் கம்பா எதையும் எதிர்பார்த்து
மன்றாடு கின்ற வழக்கம் எனக்கில்லை!

இராமனின் நாமமே எல்லாம் எனக்கென்று
சேமமுற வாழ்ந்த சிறிய திருவடியான்
பின்னெதற் கிங்கே பெரிதாக இப்பாராட்(டு)
என்ன நினைப்பாயோ, என்ன இருந்தாலும்
நல்லவற்றைப் பாராட்டி வந்தால்தான் நானிலத்தில்
நல்லவை மங்காது நாளும் நிலைபெறுமாம்
இஃதொன்று மட்டுமில்லை! கம்பனே உன்னால்யான்
எய்திய சீர்த்திகள் எவ்வளவோ உண்டலவோ,
எத்தனையோ பாராட்டு யான் பெற்றேன் உன்னாலே!
ஒத்ததாய் ஒன்றேனும் யான் சொல்ல வேண்டாமா!
ஆகவே, கம்பா அடியனென் பாராட்டை
ஈகென ஏற்பாய் இசைந்து!

கம்பனே
உயர்வென்று சொன்னால் மிக மிக உயர்வு!
எத்தகை உயர்நிலை எனக்களித்தனை
மேரு மலையெனக் கொருகால் நாசு
பாரை இடந்து நான் பந்தாட வல்லேன்
நான் உள்ள இடத்திற் புயலும் நெருங்குமா?

நான் கொஞ்சம் நிமிர்ந்து பார்த்தால் இந்த
வான்பூச் சொரியும் விண்மீன்க ளாலே
அத்துணைப் பெரிய உருவ மெடுப்பேன்
ஏன் தெரியுமா நான் வாயு மைந்தன்
மழைத்துளி இடுக்கில் நுழைந்தும் வருவேன்
ஈரஞ் சிறிதுமென் உடம்பிற் படாமல்
இத்துணைச் சிறிய உருவமுங் கொள்வேன்
உருவு போதுமா? உருவிற் கேற்ற
அறிவு வேண்டுமே! அதையுந் தந்தாய்!
யாரெனைப் பார்த்த போதும் இவனொரு
பேர றிஞனென்று பேச வைத்தாய்!

நாட்படா மறைகளால் நவைபடா ஞானத்தால்
கோட்படாப் பதமாய் எனக்குக் கொடுத்தாய்!
ஆற்றல் நிறைவு கல்வி அமைதியொடு
வேற்றுமை இல்லா அறிவு தந்தாய்!
உருவும் அறிவும் இருந்தாற் போதுமா
பதவியில்லாவிடில் உயர் விருக்குமா?
அதையுந் தந்தாய்! அன்றும் இன்றும்
உயர்ந்த தான பதவியில் அமர்த்தினாய்!
ஆமாம்! என்னை நீ அமைச்ச னாக்கினாய்!
அமைச்ச ராவது சாமா னியமா!
நமைச்சல் எடுக்கும் பலபே ருக்கு!
சுமக்கத் தெரிய வேண்டுமே அவர்க்கு!

குரக்கினத் தவன்நான் எனினும் நன்னெறி
சமைக்கத் தெரிந்த அமைச்ச ஞக்கினுய்!
இத்தகை அமைச்ச ராவது கடினம் அன்ருே
ஆயினும் கம்பா அதைவிடக் கடினம்
அமைச்ச ராகவே நடந்து கொள்வது

எந்த இடத்திலே எதைச் சொல்லுவது
எந்த நேரத்தில் எதைச் சொல்லுவது
இதுவன்ருே முக்கியம் அமைச்சர்க் கெல்லாம்!
அதிலும் என்னை நீ கலைஞ ஞக்கினுய்!
சொல்லின் நாயகன் மூலமே எனக்கும்
சொல்லின் செல்வனெனப் பட்டந் தந்தாய்!
தக்க இன்ன தகாதன இன்னவென்(று)
ஒக்க உணரும் உணர்வு தந்தாய்!

வருபவர் நண்பரா பகைவரா என்றே
ஒருமுறை பார்த்த அளவி லேயே
தெரிந்து கொள்ளும் திறம ளித்தனை
யாருடன் கூட்டுச் சேருவதென்ற
தேருதல் உத்திகள் தெளிய வைத்தனை
எத்தனைப் பெரிய ஆற்றல் தந்தாய்
வரம்பில் ஆற்றல் வழங்கினை கம்பா!

இதற்குத்தான் இவ்வளவு பாராட்டா என்ருல்
அதற்கில்லை கம்பா! பின் எதற்கென்ருல் சொல்லுகிறேன்

அமைச்சனும் என்னைத் தூதனுய் அனுப்பினுய்!
அமைச்சர் அயல்நாட்டுத் தூதராய்ச் செல்வது
அன்றே நிகழ்ந்த தடியேன் மூலம்
பாதியில் திரும்பிய தூதன்யான் அல்லேன்
எடுத்த கருமம் முடித்தே திரும்பினேன்
ஆயினுஞ் சிலபேர் குற்றஞ் சொல்கிருர்
என்ன குற்றம், தீவைப்புக் குற்றம்!
தூயவன் தூதன்நான் தீயது செய்வனு?
அடியேன் இலங்கையில் அடிவைக்கு முன்னமே
புகையா நெருப்பங்குப் புகைந்து கொண்டிருந்ததே!

காமத்தீ ஒரு புறமும் கற்புத்தீ ஒரு புறமும்
யாமத்தும் அவியா தழலாகி இலங்கை மன்னன்
ஈமத்தீ வருகையினை எதிர்பார்த் திருக்கையில்தான்
ஓமத்தீ வளர்ப்பவன்போல் ஓடோடி நான் சென்றேன்

நீற்றைப்போல் இருந்தஅவ் விருபெரு நெருப்பிடையே
காற்றின் புதல்வனெனைக் காற்றுடப் போகவிட்டால்
ஆற்றி இருக்குமா அந்நெருப்பு? அது தனது
தோற்றத்தைக் காட்டிச் சுடுதற்குத் தொடங்கியது.

அங்கி யெனும்பெயருக் கேற்றாற்போல் அஃதுடனே
அங்கத்தைக் காட்டி அனைவரையுஞ் சுட்டது
மங்காத கற்பினளென் மாதாவின் ஆணையினால்
எங்கே நான் சென்றாலும் என்னைச் சுடவில்லை!

இதுதானே உண்மை கம்பா! உலகம்
எது சொன்னா லென்ன! என்றால்
சொன்ன சொல் ஒன்று போதுமே
மன்னுலகம் உள்ளவரை அச்சொல் நிற்குமே!

ஊழி ஓர் பகலாய் ஓதும்
யாண்டெலாம் உலகம் ஏழும்
ஏழும் வீ வுற்ற ஞான்றும்
இன்றென இருத்தி என்னும்

வாழிய வள்ளால் என்னும்
மாசிலாக் கற்பின் செல்வி
சூழுரை சொன்னாள் அந்தச்
சொல்லென்றும் நிற்கும் அன்றே!

தூதுநான் சென்றதுவும் சோதனையை வென்றதுவும்
சாதனை புரிந்தன வெலாம்
தொல்லுலகம் உள்ளவரை சுந்தரம தாயென்றுஞ்
சொல்லி மகிழ் வெய்து மன்றே!

வாதுகள் புரிந்ததுவும் நீதிகள் புகன்றனவும்
    வல்லரக்கரை வென்றதும்

மன்றுலகம் உள்ளவரை என்றுடைய கீர்த்தியதைப்
    பன்னியிசை பாடுமன்றே!

ஏதமார் வனத்தெம் பிராட்டியைக் கண்டு நான்
    இசைந்துரை மொழிந்தனவெலாம்

என்றுமுள தென்றமிழ் இருக்கும்வரை இவ்வுல
    கியம்பி இசை கொள்ளுமன்றே!

ஆதலால் கம்பனே காதலால் யானுனக்
    களிக்கின்ற கைம்மாறென

ஆராய்ந் தெடுத்தவிப் பாராட் டலங்கலை
    அன்போடு சூடியருளே!

அமைச்சனைப் படைத்தாய்! தூதனைப் படைத்தாய்!
அனைத்துக்கும் மேலே தொண்டனைப் படைத்தாய்!
எப்படிப் பட்ட தொண்டன் தெரியுமா!
ஒன்றே கொள்கை ஒருவனே தலைவன்
என்றே வாழ்ந்த எளிய தொண்டன்
ஒன்றே ஒன்றே என்று வாழ்ந்தாலும்
தனக்கென ஒன்றுமே வேண்டாத தொண்டன்
ஆமாம்! ஒன்றுமே வேண்டாத தொண்டன்!

அறுபதி னாயிரம் என் அன்னையின் தந்தைக்கு
என்ன வென்று நான் சொல்ல மாட்டேன்!
அவனுக்கு வாய்த்த என் ஐயனுக்கோ
ஒன்றுக்கு மேலே எப்போதும் வேண்டாம்!
ஆனால் எனக்கோ ஒன்றுமே வேண்டாம்!
அவன்போல் யானும் ஒன்று பெற்றிடில்
தலைவற்கும் தொண்டர்க்கும் வேறுபா டிராதே
என்று கருதியோ கம்பனே எனக்கு
ஒன்றுமே வேண்டாம் என்று விடுத்தாய்!

தயரதற் குண்டு இராவணற் குண்டு
கதிரவன் மைந்தன் அவனுக்கும் உண்டு
வாயு மைந்தன் எனக்கோ வேண்டாம்
எல்லாருக்கும் உண்டு வாரிசுகள்
எனக்கு மட்டும் ஒன்றுமே வேண்டாம்

ஏனென்ருல் நான் உயர்ந்த தொண்டன்
உயர்ந்த தொண்டன் யாரெனக் கேட்டால்
எது மிக உயர்வோ அதனைக் கொடுப்பவன்!
உயிரைக் கொடுப்பவன் உயர்ந்த தொண்டன்
இன்றைக் குள்ள இலக்கணம் வேறு
எடுப்பவர் தாமின் றுயர்ந்த தொண்டர்
தலைவர் உயிரையோ மற்றவர் உயிரையோ!

அன்று உயிரைக் கொடுப்பவன் உயர்ந்த தொண்டன்
அதுபோல் ஒருவன் உயிரைக் கொடுத்தான்
தொண்டு செய்யவே பிறந்த தம்பி
போர்க்க ளத்திலே உயிரைக் கொடுத்தான்
அவனுக்கு நான்தான் உயிரைக் கொடுத்தேன்
மருந்து மலையைக் கொணர்ந்து வந்து
போன உயிரை மீட்டுக் கொடுத்தேன்
தம்பி இறந்ததால் அண்ண னுக்கும்
போக இருந்த உயிரையுந் தடுத்தேன்
ஆகையால் தானே அண்ணல் இராமனும்
எந்தையே என்னைத் தந்தையே என்ருன்
அன்று பிறந்தோம் தயரதனுக்காய்
இன்று பிறந்தோம் உனக்கே என்று
எந்தையே என்னைத் தந்தையே என்று
சொன்னதிருக்கட்டும்; என்தாய் சொன்னளே
அசோக வனத்தில் அருஞ்சிறை இருந்தாள்
தன்னுயிர் மாய்க்க எண்ணிய காலை
ஆழியைக் காட்டியான் அண்ணலின் பெயர்சொல
எந்தாய் எனக்குயிர் தந்தாய் என்ருளே!
இவ்வா றிந்த உலகி னுக்கே
தாயுந் தந்தையும் ஆய இருவரே

தந்தையே என்றெனை அழைக்கத் தானே
வாரிசே இன்றி என்னைப் படைத்தாய்
எத்தனைப் பெருமை எனக்க ளித்தாய்!

முன்சீட்டுக் கொடுத்தாயாமே எனக்கு
மொழிந்தார் வாரியார் இங்கு முந்தாநாள்
எந்தை அரியணை அமர்ந்தி ருக்க
அரியணை தாங்குந் தொண்டனைப் என்னை
முன்னே அமர்த்திய முறையென்ன கம்பா?
தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து
முந்தி யிருப்பச் செயலென்ற முறையா?

அனைத்துலகும் தாங்குவான்
அவன்தங்கும் அரியணையை
எனைத்தாங்க வைத்தாயே
எத்தகைய பெருமையது?
நினைத்தாலே இனிக்கிறது
என்றாலும் கம்பனே
எனக்கொரு சந்தேகம்
இப்போது எழுகிறது!

அரியணை தாங்குகின்ற
அதிசயம் இதுபோல
விரியுலக நாடுகளில்
வேறெங்குங் கண்டதுண்டா
தெரியாமல் கேட்கின்றேன்!
இதனாலே என்ன உண்மை
தெரிவிக்க நீஎன்னைத்
தேர்ந்தெடுத்துத் தாங்கவைத்தாய்?

தலைவர்கள்தாம் அரியணையில் அமர வேண்டும்
தொண்டரெலாம் அரியணையைத் தாங்க வேண்டும்
நிலையான இவ்வுண்மை காட்டு தற்கா
நீயென்னைத் தேர்ந்தெடுத்துத் தாங்க வைத்தாய்?

முக்கோண உச்சி யைப்போல்
 தலைவர்கள் இருப்ப அந்த
முக்கோண அடித்தளம் போல்
 தொண்டர்கள் தாங்க வேண்டும்
எக்காலும் உச்சி தன்னைத்
 தொண்டர்கள் பார்த்துப் பார்த்து
சக்களத்திச் சண்டைகள்
 செயப்படா தென்ப தற்கா?

அரியணைக்கு நானேதான் வாரிசெனத் தொண்டரெலாம்
புரியாத் தனமாகப் போரிட்டுக் கொண்டிருந்தால்
அரியணையே கடைசியிலே அம்போ என்றாகுமெனப்
புரிவிக்க வாஇந்தப் புதுமைதனைச் செய்வித்தாய்!

எப்படி ஆயினும் என்னைநீ
ஒப்பிலாத் தொண்டனாய் உயர்த்தியே
செடியாய வல்வினைகள் தீர்ப்பான் அவனடிகள்
முடியாகக் கொண்டு நான் முன்னிருந் தரியணைப்
படியாய்க் கிடப்பதுபோற் பாலித்தாய் சிறியதிரு
அடியேனுக் கிதைவிடவும் இன்னொன்று வேண்டுவதோ!

இதற்குத் தான் இவ்வளவு பாராட்டா என்றால்
இதற்கும் இல்லை கம்பா! பின்னே
எதற்கென்றால் இப்போது
சொல்லப் போகிறேனே அதற்குத்தான்
இத்தனை நேரம் சொல்லிய வெல்லாம்
எனக்கு நீ சேர்த்து வைத்த பெருமைகள்!

என் பெருமை பேசுதற்கா
 பாராட் டிசைத்திடுவேன்
தற்பெருமை ஒரு சிறிதுங்
 கொள்ளாத தன்மையினேன்!
என்தலைவன் அறங்காத்த
 எம்பிரான் இராமனவன்
தன் பெருமை சொல்லியதால்
 தமிழ்ப்பெருமை செய்தனையே!

அதற்குத்தான் கம்பா இந்தப் பாராட்டு!


மூலமும் நடுவும் ஈறும்
இல்லதோர் மும்மைத் தாய
காலமும் கணக்கும் நீத்த
காரணன் கையில் ஏந்தி
ஆலமார் அரக்கர் தம்மை
அழித்தறங் காத்த காதை
ஞாலமெல் லாம் பரப்பும்
நற்பணி செய்தா யன்றே!

அதற்குத்தான் கம்பா இந்தப் பாராட்டு!

இற்பிறப் பென்ப தொன்றும்
இரும்பொறை என்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும்
களிநடம் புரியக் கண்ட
அற்புதக் காட்சி தன்னை
அடியனேன் மூல மாக
இப்புவி காணச் செய்த
இரும்பூது செய்தா யன்றே!

இதற்குத்தான் கம்பா இந்தப் பாராட்டு!
இதோடு முடிகிறது என்னுடைய பாட்டு!

பாட்டாலே செய்தஇப் பாராட்டுப் பத்திரத்தைக்
கேட்டாரும் வாழ்க! இனிக் கேட்பதற்கு - வேட்டாரும்
எப்பொழுதும் வாழ்கவென் றேத்தி அனுமன்கை
ஒப்பமிட்டேன் உள்ளம் உவந்து!



கவிஞர் செவ்வேள்

கவிஞரின் இயற்பெயர் சுப்பிரமணியன். அன்னையார் ஜெயலட்சுமி, தந்தையார் வைத்தியலிங்கம் அவர்கள்.

புதுவையில் 9.6.1930ல் பிறந்த இவர், தமிழாசிரியராகப் பணிதொடங்கிய பின்னர் பிரெஞ்சு மொழி ஆசிரியராக இரண்டாண்டு காலம் பணி செய்தார்.

அதன் பிறகு அரசு நிதித் துறையில் எழுத்தராய் நுழைந்த இவர் பலதுறைகளில் பணியாற்றி, இப்போது உள்துறை உதவிச் செயலராக விளங்குகிறார்.

1949ல் இருந்தே பல இதழ்களில் கதைகள் கவிதைகள் எழுதி வருகிறார். 1967 ல் 'காதல் நெஞ்சம்' என்ற கவிதைத் தொகுப்பினை வெளியிட்டிருக்கிறார்.

இலக்கிய ஊற்றான இதயம்கொண்ட கவிஞர் செவ்வேள் பழகுதற்கினிய பண்பாளர்.

பல்வேறு இலக்கிய நிகழ்ச்சிகளில் இவர் பங்கேற்றுச் சிறப்பெய்தி வருகிறார்.

பிரெஞ்சுமொழிப் பயிற்சியிருப்பதால் அம்மொழியிலிருந்து கதை, கவிதைகளைத் தமிழாக்கித் தந்துள்ளார்.

இல்லறத்தில் ஐந்து பிள்ளைகளைப் பெற்றிருக்கும் கவிஞர், இன்பத் தமிழுக்கு இரண்டாவது நூலாகக் 'கம்பன் சுவை' யைத் தருகிறார். இனியும் பல நூல் படைத்துப் பயன் வளர்த்துப் புகழ் குவிப்பாராக !